PUBLIC LIBRARY
JAFFNA

ISSN 1391-9504

# Vijey விஜய்
# விஜய்


05.08.2015 - மலர் 12, இதழ் 23

தலைமைகள் பல வகித்தபோதும்
இன் தமிழை மறவாதவர்...

ஆங்கில உரைகளிலும்
தமிழ் வரையத் தவறாதவர்...

அறிவுலகை காட்டியவாறே
மனிதத்தையும் போதித்தவர்....

உலகை நீர் பிரிந்துவிட்டீர். ஆனால்
உலகம் உம்மை பிரியவில்லை...!





விலை
ரூபா 15/-

## 2015 இல் கண்டுபிடிக்கப்பட்டுள்ள உயிரினங்கள்...



## விண்வெளியில் அதிக நாட்கள் தங்கியிருந்த விண்வெளி வீரர்




## மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இங்குள்ள சிறுவர்களைப் பார்த்து படம் வரைந்து கொண்டிருப்பவர் யார்?


   1. வைத்தியர் 2. ஓவியர்
   3. பாடகர்

2. சிறுவர்களுக்குப் பின்னால் கயிறு கட்டித் தொங்கவிடப்பட் டிருப்பவை யாவை? அவை என்னென்ன நிறங்களில் உள்ளன?

   ....................................

3. இங்குள்ள சிறுவர்கள் .................................... இருக்கின்றனர்.

   1. சோகமாக 2. சோர்வாக 3. குதூகலமாக







4. 'நிறம்' என்பதற்கான ஒத்தகருத்துச் சொற்கள் இரண்டு தருக.

   ....................................

இங்குள்ள ஒவ்வொரு காட்சித் தொகுதியிலும் காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்கு முறையை இலக்க மிட்டுக் காட்டுக.



'மலர்கள்' பற்றி நான்கு வாக்கியங்கள் அமைக்க.






1. படத்தில் காணப்படும் பழங்களில், நீங்கள் அறிந்த பழங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

   ....................................

2. 'செடியின் மேல் காய், காயின் மேல் செடி' எனும் விடுகதை குறிக்கும் பழத்தின் பெயர் யாது?

   ....................................

3. நான்கு .................... பழங்களின்மீது ஏறி ....................

   (பிள்ளை/ இருக்கின்றது) (சிறுவர்கள்/ இருக்கின்றன)
   (பிள்ளைகள்/ இருக்கின்றன)

4. 'பழங்கள் சுவை மிக்கவை' எனும் கூற்று;

   சரியானது/ பிழையானது

- ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA





விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# அபுதாபி பொலிஸ் திணைக்களத்தின்

# ரொபோகொப் கார்

'ரொபோகொப்' என்ற ஹொலிவூட் திரைப்படம் 1980 மற்றும் 1990 களில் வெளியானது. இத்திரைப்படம் 2014 ஆம் ஆண்டிலும் மீள் உருவாக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இத்திரைப்படத்தின் கதாநாயகன் பாதி மனிதனாகவும் பாதி இயந்திரமாகவும் செயற்படும் ஒரு பொலிஸ் அதிகாரியாகும். இந்நிலையில் அண்மையில் ஐக்கிய அரபு ராச்சியத்தின் தலைநகரான அபுதாபி பொலிஸ் திணைக்களத்தில் 'ரொபோகொப்' என்ற பெயரில் புதிய அங்கத்தவர் ஒருவர் இணைந்துகொண்டார். ஆனால், அவர் ஒரு பொலிஸ் அதிகாரி அல்லர். மாறாக, அதுவொரு ரொபோ காராகும். இதற்கு 'ரொபோகொப் கார்' என்று பெயர் சூட்டியுள்ளனர். அபுதாபி பொலிஸ் திணைக்களம் அண்மையில் இந்த ரொபோகொப் காரினை அறிமுகம் செய்து வைத்திருந்தது.



## காரின் பெறுமதி

இந்த காரின் பெறுமதி 3.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். தற்போது இவ்வகையான கார் ஒன்று மட்டுமே அபுதாபி பொலிஸ் திணைக்களத்திடம் காணப்படுகின்றது. இதன் வெற்றியைப் பொறுத்து, மேலதிக கார்களை கொள்வனவு செய்யப்போவதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. இது அபுதாபியிலுள்ள 'W Motors' எனும் கார் உற்பத்தி நிறுவனத்தின் ஓர் உற்பத்தியாகும்.

## மத்திய கிழக்கின் அதி திறமைசாலி

இந்த காரினை 'மத்திய கிழக்கின் அதி திறமைசாலி' என்றும் அழைக்கின்றனர். 3.7 லீற்றர் ட்வின் டர்போ எஞ்ஜின் மூலம் இந்த கார் இயக்கப்படுகின்றது. 740 குதிரை வலு திறன் கொண்டது. 2.8 செக்கன்களில் 62 மைல்கள் தூரம் பயணிக்கக்கூடியது. [illegible] மற்றும் கணினித் தொகுதி என்பன இந்த காரினுள் அடங்கியுள்ளன. எந்தவொரு நபரையும் வெகு தொலைவில் இருந்து அடையாளம் காணும் வகையில் இந்த கார் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால், சுயமாகப் பயணிக்கும் ஆற்றல் இந்தக் காருக்கு இல்லை.



## செய்மதி தொழில்நுட்பம்

ரொபோகொப் கார்ருக்கு பயன்படுத்தப்படும் செய்மதி மற்றும் ஜி.பி. ஆர்.எஸ்.தொழில்நுட்பமானது, எகின் நிறுவனத்தின் தயாரிப்பாகும். அதிக வேகமாக செல்லும்போது சுற்றியுள்ளவர்களை இனம் காணும் தொழில்நுட்பமும் இதில் உண்டு. கார்களும் புதிய தொழில்நுட்பங்களும் கைகோர்ப்பதனால் பல விடயங்களை சாதித்துக்கொள்ள முடியும் என்று எகின் நிறுவனத்தின் பிரதானி அக்கிப் எகின் குறிப்பிடுகின்றார். வேகமாக வானத்தை ஓட்டிச் செல்லும் சாரதியின் முகத்தையும் வாகனத்தின் இலக்கத் தகட்டினையும் இந்த காரிலுள்ள தொழில்நுட்பக் கெமராக்கள் மூலம் படம்பிடித்து, இனங்கண்டுகொள்ள முடியும். மேலும், அவை அனைத்தையும் சேமித்து வைப்பதற்கான வசதியும் ரொபோகொப் காரில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

-அஷ்வினிதா

விஜய் வாசகர்களே....!

ரூ. 55,000
மதிப்புள்ள
சோலார் பெனல்
(Solar Panel) ஒன்றை
வெல்வதற்கு ஆயத்தமாகுங்கள்...
உங்கள் வீட்டின் மின்சார விரயத்தைக் கட்டுப்படுத்த அரிய வாய்ப்பு
வாரம் தோறும் வெற்றி வாய்ப்பு
போட்டி விபரங்கள் அடுத்த வாரம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவியும் ஓணானும்

ஒரு தென்னந்தோப்பின் வேலியோரத்தில் உயரமாக வளர்ந்திருந்த தென்னை மரம் ஒன்றில், குருவி ஒன்று கூடு கட்டி வசித்து வந்தது. இதனை அவதானித்த ஓணான் ஒன்று அந்த தென்னை மரத்தின் மீது ஏறி அக்குருவிக்கூட்டின் அருகே சென்றது. கூட்டில் முட்டையுடன் இருந்த குருவி ஓணானைக் கண்டதும் திடுக்கிட்டது. அப்போது ஓணான்... ''குருவியே, நீ மரியாதையாகக் கூட்டை விட்டுப் பறந்து சென்றுவிடு. இல்லையேல் நீ இட்டு வைத்திருக்கும் முட்டைகளை உடைத்துக் குடித்துவிட்டு, உன்னையும் கடித்துவிடுவேன்'' என்று மிரட்டியது.

அந்தக் கொடூரமான ஓணான் கூறியதைக் கேட்ட குருவிக்கு அச்சம் ஏற்பட்டது. அது மிகவும் பணிவோடு ஓணானை நோக்கி ''ஓணானே, என்னை ஒன்றும் செய்துவிடாதே! உன்னோடு சண்டையிட என்னால் முடியாது. நீ என் முட்டைகளை குடிப்பதையும் என்னால் தடுக்க முடியாது. அதனால், உன்னிடம் நான் ஒரு நிபந்தனையைக் கூறுகிறேன். அந்த நிபந்தனைக்கு நீ கட்டுப்படுவாய் என்றால் நான் மிகவும் மகிழ்ச்சியுடையவனாக இருப்பேன்'' என்றது குருவி.

''நீ என்ன நிபந்தனையைக் கூறப்போகிறாய்?'' என்று கோபத்துடன் கேட்டது ஓணான். ''ஓணானே, நீ என் கூட்டில் இருக்கும் முட்டைகளைத் தாராளமாகக் குடித்துச் செல்லலாம். ஆனால், ஒரு நாளைக்கு ஒரு முட்டை வீதம்தான் குடிக்க வேண்டும். இதுதான் நான் உனக்கு இடும் நிபந்தனை'' என்றது குருவி.

ஓணான் சிறிது நேரம் யோசனை செய்துவிட்டு 'இந்தக் குருவி நம்மைத் தினமும் ஒரு முட்டையை குடிக்கச் சொல்கிறதே. சரி... நமக்குக் கிடைத்த வரைக்கும் லாபம்தான். நாம் அது கூறியபடி தினமும் ஒரு முட்டையைக் குடிப்போம்'' என்று மனதுக்குள் முடிவெடுத்துக்கொண்டது. ''குருவியே, உன்னுடைய நிபந்தனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். தினமும் கூட்டில் இருந்து ஒரு முட்டையினை நான் குடித்துக்கொள்கிறேன். ஆனால், நீ வேறு நிபந்தனைகள் எதுவும் போடக் கூடாது'' என்றது ஓணான்.

''ஓணானே, நான் உன்னிடம் ஒரு தடவை மட்டும்தான் நிபந்தனையிடுவேன்'' என்றது குருவி. அதனைக் கேட்ட ஓணான் மகிழ்ச்சியோடு குருவிக் கூட்டிலிருந்து ஒரு முட்டையைக் குடித்துவிட்டுச் சென்றது. குருவியோ அந்தக் காட்சியைப் பார்த்தபடி கவலையுடன் இருந்தது. அன்று முதல் ஓணான் தினமும் அங்கு வந்து குருவிக்கூட்டில் இருந்த ஒவ்வொரு முட்டையையும் குடித்துவிட்டுச் சென்றது. 'நம் முட்டையினை நாள்தோறும் ஓணானிடம் இழந்து வருகிறோமே' என்று கவலை அடைந்தது குருவி.

ஒருநாள் தோப்பில் தேங்காய் பிடுங்குபவர் ஒருவர் குருவி கூடு கட்டி இருந்த தென்னை மரத்தில் ஏறினார். கூட்டில் இருந்த குருவியோ அவரைக் கண்டு அச்சத்தால் நடுங்கியது. இந்த மனிதரால் ஒரேடியாக நமக்கு ஆபத்து வரப்போகிறதே!' என்று கவலையுடன் அமர்ந்திருந்தது.

அந்த மனிதரும் தென்னை மரத்தின் உச்சியை அடைந்து, குருவிக் கூட்டை எறிட்டுப் பார்த்தார். கூட்டின் உள்ளே குருவி கவலையுடன் இருப்பதைப் பார்த்து, அதன்மீது இரக்கம் கொண்டு ''குருவியே, நீ எதனால் இப்படி கவலையாக இருக்கிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது?'' என்று அன்போடு கேட்டார். ''ஐயா, உங்களால் எனக்கு ஆபத்து வரப்போகிறது என்று பயந்துகொண்டிருந்தேன். ஆனால், நீங்களோ என்மீது அன்பு காட்டுகிறீர்கள்'' என்றது குருவி.

''குருவியே, என்னால் உனக்கு எப்போதுமே ஆபத்து ஏற்படாது. அதனால், நீ ஒருபோதும் என்னைக் கண்டு பயப்படாதே'' என்றார் அந்த மனிதர். ''ஐயா, இப்போது எனக்கு இங்கு வசிக்கும் ஓணான் ஒன்றை நினைத்தால்தான் பயமாக இருக்கின்றது. அந்த ஓணான் என் கூட்டில் உள்ள முட்டைகளை தினமும் வந்து குடித்துச் செல்கிறது. அதனால்தான் நான் மிகவும் கவலையுடன் இருக்கிறேன்'' என்றது குருவி.

''குருவியே நீ கவலைப்படாதே. இன்று நாம் இருவரும் அந்த ஓணானை இங்கு வரமுடியாமல் செய்துவிடலாம். நீ நான் சொல்கிறபடி நடந்துகொள்ள வேண்டும்.'' என்றார் அந்த மனிதர். ''ஐயா நீங்கள் சொல்கிறபடியே நானும் நடந்துகொள்கிறேன்'' என்றது குருவி.

''குருவியே, நான் ஒரு சுண்ணாம்பு முட்டையைத் தயாரித்துத் தருகிறேன். நீ உன் கூட்டில் உள்ள மற்றைய முட்டைகளை மறைத்துவிட்டு நான் தருகிற முட்டையை மட்டும் கூட்டில் வைக்க வேண்டும். ஓணான் வந்து அந்த முட்டையை எடுத்து உண்டதும் அதன் வாய் சுண்ணாம்பினால் வெந்துவிடும். அதன்பின்னர் அது இப்பக்கமே வராமல் சென்றுவிடும்'' என்று கூறினார். குருவியும் தனது முட்டைகளைப் பாதுகாக்க உதவிய அந்த மனிதருக்கு மகிழ்வுடன் நன்றி கூறியது.



# நண்பர்கள்

ராமுவும் கோவிந்தனும் பால்யகால நண்பர்கள். ராமு, செல்வாக்கும் செல்வமும் மிக்க வியாபாரி. கோவிந்தனோ ஏழை விவசாயி.

கோவிந்தன் தனது நிலத்தில் பூசணிக்காய்களைப் பயிரிட்டிருந்தான். அதில் ஒரு பூசணி மிகப் பெரிய அளவில் விளைந்திருந்தது. அதைக் கண்ட கோவிந்தன் அந்நாட்டு அரசனுக்கு அதைப் பரிசாகக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டான். உடனே அதை எடுத்துச் சென்று அரசனுக்கு பரிசாகக் கொடுத்தான்.



கோவிந்தனின் அன்பையும் நல்ல குணத்தையும் பாராட்டிய அரசர், அவனுக்கு 100 பொற்காசுகளைப் பரிசாகக் கொடுத்தார். இதைப்பற்றிக் கேள்விப்பட்ட ராமுவுக்கு பொறாமையாக இருந்தது. 'மிகப் பெரிய பூசணிக்காயை கொடுத்ததற்கே அரசர் 100 பொற்காசுகளைப் பரிசளித்திருக்கிறார் என்றால், நான் அதைவிடப் பெரிதாக ஒரு யானையைப் பரிசாகக் கொடுத்தால் எவ்வளவு பொற்காசுகள் தருவார்' என்று பேராசைப்பட்டான்.

அவன் நினைத்தபடியே ஒரு யானையை விலைக்கு வாங்கி அதனைக் கொண்டு சென்று அரசனுக்குப் பரிசாக அளித்தான். உடனே அரசர் சிந்தித்தார், 'இவனின் உள்நோக்கம் என்ன' என்பதை அறிந்து ஒரு தீர்மானத்திற்கு வந்தார். யானையையே வாங்கக்கூடிய அளவுக்கு செல்வம் இருக்கும் ராமுவுக்கு தான் கொடுக்கும் தங்கக் காசுகள் தேவையில்லையே! என்று தீர்மானித்து, கோவிந்தன் கொடுத்த பெரிய பூசணிக்காயை ராமுவுக்கே பரிசாகக் கொடுத்துவிட்டார். பாவம் ராமுவுக்கோ மிகவும் ஏமாற்றமாகப் போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'நாம் கற்பிப்பதனாலேயே கற்றுக்கொள்கின்றோம்' என்பதற்கமைய வாழ்ந்து காட்டிய மாமனிதர்

இந்தியாவின் பதினோராவது ஜனாதிபதியான கலாநிதி APJ அப்துல் கலாம் அவர்களின் மறைவுச் செய்தி (27.07.2015) முழு உலகையும் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்திவிட்டது.

விண்ணியல் நிலை ஆய்வாளராக, அறிவியலாளராக, கல்விமானாக, திட்டமிடல் மேலாளராக, ஜனாதிபதியாக, பேராசிரியராக, ஆசிரியராக என தனது வாழ்நாளில் அப்துல் கலாம் ஏற்றுக்கொண்ட பாத்திரங்கள் ஏராளமானவை. அவரின் இயல்பான, எளிமையான வாழ்க்கைக் கோலமே, அனைத்துத் தரப்பு மக்களின் மனங்களையும் அவர் கவரக் காரணமாக அமைந்திருந்தது.

1931 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி, இந்தியாவின் ராமேஷ்வரத்தில் ஜெயினுலாப்தீன் மற்றும் ஆஷியம்மா தம்பதிகளுக்கு அப்துல் கலாம் மகனாகப் பிறந்தார். தமது சிறு வயதில் ஏழ்மையால் பாதிக்கப்பட்ட அப்துல் கலாம், பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில், செய்தித் தாள்களை விநியோகம் செய்து, அதன்மூலம் பணம் சம்பாதித்து தனது குடும்பத்திற்கு உதவி வந்தார். செய்தித் தாள்களை விநியோகம் செய்த அந்தச் சிறுவன், பின்னாளில் உலகமே வியக்கின்ற அறிவியலாளராக, இந்தியாவின் ஜனாதிபதியாக வருவார் என அந்நேரம் யாரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

ஓர் அறிவியலாளர் என்ற முறையில் பத்ம பூஷண், பத்ம விபூஷண் மற்றும் இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருதையும் ஜனாதிபதியாக பதவியேற்கும் முன்பே இவர் பெற்றுக்கொண்டார். 2002 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் பதினோராவது ஜனாதிபதியாக பணியாற்றியபோது, ஜனாதிபதி மாளிகையை எளிமையின் பிறப்பிடமாக மாற்றினார். ஜனாதிபதி பதவியில் இருக்கும்போது அந்தப் பதவிக்கு பெருமை கொடுத்ததோடு மட்டுமன்றி, அப்பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னரும் மக்களைப் பற்றியே சிந்தித்து செயலாற்றிய மாமனிதர் அப்துல் கலாம் ஆவார். இதனால்தான் அவரை 'மக்கள் ஜனாதிபதி' என்றும் எல்லோரும் போற்றுகின்றனர்.

தான் அறிவியல் நிலை சார்ந்த பல பதவிகளை வகித்தாலும்,தனக்குப் பிடித்தமான பாத்திரம் ஆசிரியர் என்பதை தொடர்ச்சியாகக் கூறி, அதன்படியே வாழ்ந்தும் காட்டியவர் இவர். பல பாடசாலைகளுக்கும் சென்று உயரிய விடயங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு சொற்பொழிவுகளை ஆற்றி, அதன் மூலமாக தனது இறுதி மூச்சு வரை கல்வி புகட்டிக்கொண்டேயிருந்தார். 'நாம் கற்பிப்பதனாலேயே கற்றுக் கொள்கிறோம்' எனும் வாக்கிற்கிணங்க வாழ்ந்து காட்டிய மாமனிதராக அப்துல் கலாம் அவர்களை இனங்காணலாம்.

தமிழைத் தனது தாய்மொழியாகக் கொண்ட அப்துல் கலாம் அவர்கள், அந்த மொழியில் தனது கருத்துக்களை வெகு இனிமையாகவும் சரளமாகவும் பகிர்ந்துகொள்கின்ற பாங்கு கவர்ச்சிக்குரியது. தமிழ் மொழியின் பழம்பெரும் இலக்கிய நிலைக்குச் சொந்தமான, கணியன் பூங்குன்றனாரின், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடல் வரிகளை ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில், தான் ஆற்றிய உரையில் உரக்கச் சொன்னவர் என்ற பெருமையும் கலாநிதி அப்துல் கலாமையே சாரும்.

இளைஞர்களையும் யுவதிகளையும் தனது கருத்துக்களாலும் அறிவுரைகளாலும் கவர்ந்தவர்தான் அப்துல் கலாம் அவர்கள். 'தூங்கும் போது வருவது கனவன்று. உன்னைத் தூங்கவிடாமல் உன் இலட்சியத்தை அடையச் செய்வதே கனவு' என்ற உயரிய தத்துவத்தையும் இலட்சியத்தை நனவாக்கப் பாடுபட வேண்டும் என்பதன் அவசியத்தையும் இரத்தினச் சுருக்கமாகவும் மிக அழகாகவும் கூறியிருந்தார்.

ஒரு மனிதனின் முன்னேற்றத்தினதும் வெற்றியினதும் அடிப்படை ஏற்பாடாக, எளிமையான வாழ்க்கையும் இனிமையான பேச்சும் காணப்படும் என்பதை தனது வாழ்க்கையின் மூலமாக வாழ்ந்து காட்டிய மனிதப் புனிதராக கலாநிதி அப்துல் கலாம் அவர்களை இனங்காணலாம். அவர் இவ்வுலகைவிட்டு மறைந்தாலும், அவரால் வழங்கப்பட்ட அறிவுரைகள், கருத்துக்கள், படைப்புகள், வாழ்க்கைத் தத்துவங்கள் என்பன உலகம் இருக்கும் காலமெல்லாம் இருந்து கொண்டேயிருக்கும்.

மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் அதிக அன்பு கொண்டிருந்த அப்துல் கலாம் அவர்கள், மேகாலயாவின் ஷில்லாங் நகரில் அத்தகையதொரு மாணவ சமூதாயத்தினரிடம் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும்போதே, மாரடைப்பு ஏற்பட்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். எனவே, மாணவ சமூதாயம் அவருக்கு செய்யக்கூடிய உயர்ந்த கௌரவம், அவரது விருப்பத்தின்படி புதியதோர் உலகை படைப்பதாகும்.

**- தாரிக் அஸீஸ்**





*** தனது சுயசரிதை நூலான 'அக்னிச் சிறகில்' அவர் கூறிய வரிகள் மிகவும் வலிமை மிக்கவை. அவை வாழ்வின் அர்த்த நிலையை வெளிப்படுத்துபவை.**

*"நான் எதையும் சம்பாதிக்கவில்லை. எதையும் கட்டிவைக்கவில்லை. என்னை மற்றவர்கள் உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என நான் விரும்பவில்லை. என் கதையால் சில ஆத்மாக்களாவது உத்வேகம் பெறக்கூடும் என நம்புகிறேன்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப் பணிகளைச் செய்தால் நற்பெயர் நிலைக்கும்



பாடசாலை சீருடை முழுவதும் அழுக்கும் தூசியும் நிறைந்த நிலையில் முகுந்தன் வீட்டுக்குள் பிரவேசித்தான்.

''என்ன மகன்? இந்தக் கோலத்தில் வந்திருக்கிறாய்? உனது உடை முழுவதும் அழுக்கும் சேறும் படிந்துள்ளது'' என்று அம்மா கோபத்துடன் முகுந்தனைப் பார்த்துக் கேட்டார். ''இன்று எமது பாடசாலையில் சிரமதானமொன்று நடைபெற்றது. அதுதான் அம்மா இப்படி....''


''ம்... அப்படியா, என்ன சிரமதானம்...'' என்று அம்மா கேட்டார்.

''அம்மா நாம் இன்று அவசரமாக வகுப்பறையை சுத்தப்படுத்தினோம். அப்படி இருந்தும் சிலர் அதற்கு உதவிசெய்யவில்லை...'' என முகுந்தன் கூறும்போது அவனது முகத்தில் கவலை தெரிந்தது.

''உண்மையாகவா மகன். அப்படியாயின் ஆசிரியர் அவர்களுக்கு என்ன கூறினார்?'' என அம்மா கேட்டார்.

''ஆசிரியர் அவர்களுக்கு இதுபோன்ற பொதுவேலைகளைச் செய்வதில் உள்ள முக்கியத்துவத்தை விளங்கப்படுத்தினார். எங்கள் அனைவருக்கும் அது குறித்து நிறையவே விளக்கமளித்தார்.''





## பொதுப்பணி என்றால் என்ன?

பொதுப்பணி என்பது முழு சமூகத்தின் நன்மைக்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும். சுற்றுச் சூழலை சுத்தம் செய்தல், பாதைகளை சீர்திருத்தல், பொது இடங்களை சுத்தம் செய்தல், பாடசாலை சூழலையும் பாடசாலையில் வகுப்பறைகளையும் சுத்தம் செய்தல் உள்ளிட்ட மேலும் பல விடயங்களை பொதுவேலை எனக் குறிப்பிடலாம்.

## பூர்விக வரலாற்று ரீதியாக இடப்பட்ட அத்திவாரம்

மனித சமுதாயம் தோன்றிய காலம் முதல் மனிதன் பொதுச் செயற்பாடுகளில் ஈடுபடும் பயிற்சியைப் பெற ஆரம்பித்தான். ஆதிகாலத்தில் காட்டு வாழ்க்கையை வாழ்ந்த கால கட்டத்தில்கூட மனிதன் சமூகமாகவே இணைந்து வாழ்ந்துள்ளான். கூட்டாகச் சென்றே வேட்டையாடினான். வேட்டையாடிய பிராணிகளை தம்மிடையே ஒற்றுமையாக பகிர்ந்துகொண்டான். அந்தவகையில், ஒரே சூழலில் ஒன்றாகவே மனிதன் வாழ்ந்துள்ளான். இத்தகைய இயல்புகள் இன்று வாழும் மக்கள் மத்தியிலும் ஆழ வேரூன்றிய மனித குணாம்சமாகத் திகழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுப்பணிகள் செய்வதால் கிடைக்கும் நன்மைகள்

பொது வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் ஒருவருக்கு இரு நன்மைகள் கிடைக்கின்றன. தனிப்பட்ட நன்மைகள். சமூக நன்மைகள் என்பனவே அவையாகும்.

### தனிப்பட்ட நன்மைகள்

* குறித்த நபர் சமூக சிந்தனையுள்ள நல்ல மனிதராகத் திகழ்வார்.
* அவருக்கு சமூகத்தில் உயர்ந்த கௌரவம் கிடைக்கும்.
* பல்வேறு பாராட்டுகளை பெறும் வாய்ப்புண்டு.
* ஏனையோரின் அன்பும் விசேட கவனமும் கிடைக்கும்.
* சுயநலம் குறைந்து, பொதுநலம் மேலோங்கும்.
* ஏனையோர் மீதான பரிவிரக்கம் அதிகரிக்கும்.
* ஆளுமை வளர்ச்சி அடையும்.
* இத்தகையோருக்கு தலைமைத்துவம் கிடைக்கும்.

### சமூக நன்மைகள்

* சமூக இருப்பிற்கு பேருதவி புரியும்.
* பொதுப்பணிகளில் ஈடுபடுவதால் நிறுவனங்களுக்கும் அரசிற்கும் விரயங்கள் மிச்சப்படும்.
* இத்தகைய பொதுப் பணிகளால் கலாசாரத்தையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.
* நிறுவனங்களில் பலர் ஒன்றிணைந்து பொதுப்பணிகளில் ஈடுபடும்போது, தனித்தனி நடவடிக்கைகளுக்காக ஏற்படும் செலவுகள் மிச்சப்படும்.
* சமூக ஒற்றுமையை உறுதிப்படுத்தலாம்.
* இயற்கை அனர்த்தங்களின்போது, ஒன்றிணைந்து பொதுப்பணிபுரிவதன் மூலம் அப்பிரச்சினைகளில் இருந்து மீளலாம்.



## பெற்றோர்களின் முன்மாதிரி

ஒரு மனிதனிடத்தில் சமூகம் பற்றிய புரிந்துணர்வு படிப்படியாகவே ஏற்படுகின்றது. நபரொருவர் சமூகம் பற்றிய நல்லெண்ணத்தோடு பழகுவதும் அதேபோல் பொதுப்பணி குறித்த உந்துதலுக்கான அடிப்படை எண்ணக்கரு உருவாதலும் சிறுவயதிலேயே ஏற்படுகின்றன. சிறு வயதில் மனதில் உருவாகும் திட்டங்கள் வளர்ந்தபின் செயல் வடிவம் பெறுகின்றன. அதனால், சிறு வயதிலேயே பொதுப் பணிகளில் ஈடுபடுவது அவசியமாகின்றது. பெற்றோர்கள் பொதுப் பணிகளில் காட்டும் அக்கறையின் அடிப்படையில்தான் பிள்ளைகளிடமும் இத்தகைய மனோபாவம் ஏற்படுகின்றது. பெற்றோர்கள் இத்தகைய செயற்பாடுகளில் காட்டும் ஆர்வம் அத்தகைய செயற்பாட்டில் ஈடுபடுவதைக் காணுதல் போன்றவற்றின்மூலம் பிள்ளைகளுக்கும் பொதுப் பணிகளில் ஈடுபடும் பழக்கம் உருவாகும் என்பது உளவியல் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

## முன்மாதிரியின் அவசியம்

இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு பெரியோர்களின் முன்மாதிரிகை மிக முக்கியமாகும். அந்தப் பழக்கம் பரம்பரை பரம்பரையாக முன்நோக்கிப் பயணிக்கும். இன்றைய போட்டி நிறைந்த உலகில் இத்தகைய நற்பணிகளில் இருந்து தூர விலகி நிற்கும் சந்தர்ப்பங்களே அதிகம் காணப்படுகின்றன.


## தனிமையாகும் ஆபத்து

மனிதனொருவருக்கு தனிமையாக வாழ முடியாது. தனிமைப்படுத்தப்பட்டால் பல்வேறு உளவியல் பிரச்சினைகளுக்கு அவர் முகம் கொடுக்க வேண்டிய நிலை வரும். எவ்வளவுதான் கற்று கல்விமானாக உருவானாலும் அவர் சமூகத்தில் அன்பை பெற வேண்டும். இதனை விடுத்து அவர் சமூகத்தில் இருந்து எவ்வளவு தூரம் விலகி இருக்கிறாரோ அந்தளவிற்கு சமூகம் அவரிடமிருந்து விலகி இருக்கும். அவருக்கு உதவி புரிய ஏவருமே முன்வர மாட்டார்கள்.

## பல்வேறு நோக்கங்கள்

பெரும்பாலானோர் பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பொதுப் பணிகளில் [illegible]. அவற்றை இவ்வாறு நாம் இனங்காணலாம்.

★ சமூகத்தில் தன்னை முன்னிலைப்படுத்தும் நோக்கம்.
★ அது சமூகக் கடமை என கருதுதல்.
★ இலாபம் கருதிய எதிர்பார்ப்புகள்.
★ புண்ணிய கருமம் என எண்ணுதல்.
★ வாழ்க்கையின் ஓர் அங்கமாக பயிற்சி பெறுதல்.
★ முன்மாதிரியாக ஏற்று செயற்படுதல்.





## முன்மாதிரியை உணர்த்தும் ஒரு கதை

வேலு மாமா கிழக்கே பூந்திடல் எனும் கிராமத்தில் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த வீட்டிற்கு செல்லும் பாதை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. பாதையின் இரு மருங்கிலும் நிழலுக்குக்கூட எந்தவொரு மரமும் இருக்கவில்லை. வேலு மாமா இதற்கொரு தீர்வு காண வழியொன்றைச் சிந்தித்தார். ஒருநாள் இந்தப் பாதையின் இரு மருங்கிலும் ஆங்காங்கே குழிகளை வெட்டினார். பல்வேறு வகையான மரக்கன்றுகளை அதில் நட்டார். காலையிலும் மாலையிலும் அம்மரக்கன்றுகளுக்கு நீர் ஊற்றினார். பசளை இட்டார். அதனை பாதையில் செல்லும் பலரும் கண்ணுற்று வேலு மாமாவைப் பார்த்து எள்ளி நகையாடினார்கள். ஆனால், அவர் தனது பணியை தொடர்ந்து செய்தார்.

சில காலம் சென்றது. வேலு மாமா நாட்டிய மரக்கன்றுகள் உயரமாக அடர்ந்து வளர்ந்திருந்தது. அவை ஏனையோருக்கும் நன்மை பயத்தது. வேலு மாமாவைப் போலவே ஏனையோருக்கும் நிழலாய் அமைந்தது. வெப்பத்தைத் தணித்தது. மாமாவின் பிரார்த்தனை நிறைவேறியது. மாமா நெஞ்சார மகிழ்ந்தார். மாமாவை நகையாடியவர்களும் அன்போடு அவரைப் பார்த்து, நன்றி கூறினர். அன்றுமுதல் மாமாவுக்கு கிடைத்த [illegible] மாமாவின் தன்னலமற்ற சேவை அயலில் உள்ள ஊர்கள் தோறும் பரவின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மாதிரி வினாத்தாள் (பகுதி -II)

பெயர்: ..................................................

01) **கீழ்காணும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

அமைதியான வேளை கடலலைகள் புரண்டு புரண்டு கரையை அடைகின்றன. சில சிறுவர்கள் அலையில் மகிழ்ந்தாடுகின்றனர். கதிரவன் ஓய்வுபெறும் வேளை வருகிறது. கதிரவன் மறையும் சோகத்தைக் கண்டும், மரங்கள் தம்மை மறந்து அசைந்தாடுகின்றன. வீசிக் கொண்டிருந்த தென்றல் காற்று சிறிது நேரத்தில் பலமாக வீசத் தொடங்கியது. மரங்களும் நிலை தடுமாற, சிறுவர்களும் செய்வதறியாது ஓடத் தொடங்கினர். கடலலையும் வேகமாக வீச, மழை சோவெனப் பொழிந்தது. இயற்கையை ரசித்த மக்கள் ஓட்டமும் நடையுமாக ஒதுங்க இடம் தேடினர்.

1. பந்தியில் குறிப்பிட்டுள்ள வேளை எது?

   ..................................................................................

2. பந்தியிலுள்ள பெயர்ச் சொற்கள் மூன்று தருக.

   ..................................................................................

3. அஃறிணை, பன்மை நிகழ்கால வினைச்சொல் ஒன்று தருக.

   ..................................................................................

4. இங்குள்ள அடுக்குத் தொடர் ஒன்று தருக.

   ..................................................................................

5. இங்கு 'கதிரவன் ஓய்வு பெறும் வேளை' என்பது எதனைக் குறிக்கிறது?

   ..................................................................................

6. 'ஓட்டமும் நடையுமாக' என்ற மரபுத் தொடர் எதனைக் குறிக்கின்றது?

   ..................................................................................

7. பந்தியிலுள்ள வினை அடைமொழி ஒன்று தருக.

   ..................................................................................

02) **குழம்பியுள்ள சொற்களை ஒருங்கமைத்து, கருத்துள்ள வாக்கியம் அமைக்க.**

1. எங்கும்/ மலைகள்/ கம்பளம்/ பச்சைக்/போல்/விரித்தாற்/ காட்சியளிக்கின்றன

   ..................................................................................

2. சிறந்த/ நல்ல/ மாணவர்களுக்கு/ புத்தகங்களே/ ஆகும்/ நண்பர்கள்

   ..................................................................................

03) **கீழ்வரும் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள சரியான தனிச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

1. முக்கனிகளில் ஒன்று - ............................................. (பலா/பப்பாசி)
2. நாட்டார் பாடல்களை ........................................... (கிராமிய பாடல்கள்/ இன்னிசைப் பாடல்கள்) என்றும் அழைப்பர்.
3. மலையும் மலை சார்ந்த இடமும் - ............................................. (முல்லை/ குறிஞ்சி)
4. வெங்காயத்தின் இலை - ............................................. (தண்டு/ தாள்)

04) **வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்க.**

1. தமது நாட்டை நேசிப்பவன் (நாட்டுப் பற்றன்/ தேசாபிமானி)
2. சன்மானம் என்பதன் பொருள் (வெகுமதி/பரிசு)
3. பெயர் அடைமொழி (சிறிய/பாடி)

05) **பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

1. I am eating - ..................................................................
2. What are you doing? - ........................................................

06) **கீழ்வரும் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லை தெரிவு செய்து அதன்கீழ் கீறிடுக.**

1. Please go ............................................ (in/out)
2. That ............................................ (is/are) my school.

07) **பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கிலத்தில் எழுதுக.**

1. நான் வைத்தியசாலைக்குச் செல்கிறேன்.

   ..................................................................................

08) **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.**

1. தங்கை வருவாள்: ..................................................................

09) **பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தினை தமிழில் எழுதுக.**

1. அப்பி கமட்ட யனவா..................................................................

10) **கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. நீர்வாழ் பிராணி எது?
   1. இறால் 2. வாத்து 3. தவளை 4. முதலை
2. பின்வருவனவற்றுள் இயற்கை சுவை கொண்ட பானம்;
   1. தோடை 2. எலுமிச்சை
   3. கொடித்தோடை 4. இளநீர்
3. உடல் வளர்ச்சிக்குரிய உணவு யாது?
   1. சோறு 2. பீட்ருட் 3. மாம்பழம் 4. பயறு
4. சேதனப் பசளைக்கு அவசியமற்ற பொருள்;
   1. இலை குழை 2. தும்பு
   3. தேங்காய்ப்பூ 4 பொலித்தீன் பை
5. தகவல்களை சேகரித்து வைக்கக்கூடிய சிறந்த ஊடகமாக நீர் கருதுவது யாது?
   1. வானொலி 2. பத்திரிகை
   3. தொலைக்காட்சி 4. தொலைபேசி
6. மண்ணரிப்பை ஏற்படுத்துவதற்கு ஆதிக்கம் செலுத்தும் காரணி;
   1. புற்களை வளர்த்தல் 2. மரங்களை வெட்டுதல்
   3. காண்கள் அமைத்தல் 4. கற்களைப் பதித்தல்
7. மோட்டார் வண்டிகளை வீடுகளில் வைத்திருப்பதனால் கிடைப்பது;
   1. கௌரவம் 2. அழகு
   3. பெருமை 4. பிரயாண வசதிகள்
8. தோல் நோய்கள் ஏற்படுவது எவ்வகையான விற்றமின் குறைபாட்டாலாகும்?
   1. விற்றமின் A 2. விற்றமின் B
   3. விற்றமின் C 4. விற்றமின் D
9. வெப்ப பிரதேசத்திற்கு ஏற்ற ஆடை வகை யாது?
   1. பட்டு 2. பருத்தி 3. கம்பளி 4. நைலோன்

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக பாடநெறி பாகம் II
பாடம் 64

# தேர்தல் காலங்களில் பத்திரிகைகள் கையாளும் மூன்று வழிமுறைகள்





நாட்டில் முக்கியத்துவம் மிக்க நிகழ்வுகள் நடைபெறவுள்ளபோது அவற்றை அடியொட்டியே பத்திரிகைகளும் தமது செய்திகள், கட்டுரைகள் போன்றவற்றில் முக்கியத்துவத்தை வழங்குவதுண்டு. சுதந்திரதினம், பெருநாள் தினங்கள், சமய அனுஷ்டான தினங்கள் மற்றும் தேர்தல் தினங்கள் ஆகியன இதில் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றுள் தேர்தல் தினங்கள் வரும்போது, அனைத்து ஊடகங்களுமே கிட்டத்தட்ட ஒருமாத காலத்திற்கும் மேலாக உஷாராக செயற்படுவதுண்டு. ஏனெனில், நாட்டைப் பொறுத்தவரையில் பல கட்சிகள் இருப்பதுண்டு. அவ்வாறே, அவற்றிற்கு பல பிரிவுகளையும் சேர்ந்த ஆதரவாளர்களும் இருப்பதுண்டு. எனவே, குறிப்பாக பத்திரிகைகளை எடுத்துக்கொண்டால் தேர்தல்கள் தொடர்பான செய்திகளை வெளியிடுகையில் எல்லாக் கட்சிகளுக்கும் சம இடம் கொடுத்ததாக அவை இருக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பதுண்டு.

தேர்தலை அடியொட்டி செய்திகளை வழங்கும்போது மூன்று கோணங்களில் செய்திகள், கட்டுரைகள் அமைக்கப்படும்.

ஒன்று: குறித்த தேர்தல் பற்றியும், தேர்தல் முறைமை பற்றியும், தேர்தல் நடத்தப்படும் விதம் பற்றியும் குறிப்பிடுதல்.

இரண்டு: அரசியல் கட்சிகளின் தலைவர்கள், போட்டியாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை வெளியிடல்.

மூன்று: பத்திரிகை தனது கண்ணோட்டத்தில் நடைபெறும் நிகழ்வுகளை நியாயப்படி வெளியிடல்.

மேற்படி மூன்று காரணங்களை கவனத்தில் கொண்டே செய்திகள், கட்டுரைகள் வெளியிடப்படுகின்ற போதிலும், சில பத்திரிகைகள் தமது கொள்கை ரீதியிலான மாற்றங்கள், தேவைகள் கருதி இவற்றை வேறு விதமாகப் பயன்படுத்துவதுமுண்டு.



தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தேர்தல் காலங்களில் பத்திரிகைகளுடன் நெருங்கிய தொடர்புகளை பேண முற்படுவர். தமக்கு கூடிய வரையில் மக்கள் மத்தியில் பிரச்சாரங்களை மேற்கொள்ளவே அவர்கள் முனைவர். ஆனால், ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரையில் இத்தகைய தொடர்புகள் தவிர்க்க முடியாதவையாக இருக்கின்றபோதிலும், எல்லோருக்கும் சம அளவிலான வாய்ப்பினை வழங்குவதே ஊடகத்துறை தர்மமாக கருதப்படுகின்றது. அரசியல் பிரமுகர்களுடனான தனிப்பட்ட நட்பிற்கு முன்னுரிமை கொடுத்தல், தமது அபிமான கட்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தல், தனிப்பட்ட கவனிப்பிற்காக முக்கியத்துவம் கொடுத்தல் போன்ற பலவீனங்கள் பத்திரிகையாளரிடம் இருத்தல் கூடாது.

ஊடகவியலாளர்கள் தமக்கென தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்கள் இருக்கின்றபோதிலும் அவற்றை தமது செய்திகள், கட்டுரைகள் போன்றவற்றில் பிரதிபலித்தல் கூடாது. தேர்தல் காலங்களின்போது, அரசியல் பிரமுகர்கள் தம்மைப் பற்றி மக்களுக்கு அறியச் செய்வதற்கு அவ்வவ் பத்திரிகைகளில் விளம்பரப் பகுதிகள் உள்ளன. அவற்றில் கட்டணம் செலுத்தி விளம்பரம் செய்தலே முறையாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால், சில சந்தர்ப்பங்களில் அரசியல் பிரமுகர்கள் ஒரு மரத்தை நட்டாலோ, அடிக்கல் நடப்பட்டாலோ, மேடைப் பேச்சு பேசினாலோ தமக்கு நெருக்கமான ஊடகவியலாளர்களைக் கொண்டு அச்செய்திகளை பிரசுரிக்கச் செய்ய முயற்சிப்பர். இவ்வாறான தனிப்பட்ட நட்பிற்கு ஊடகவியலாளர்கள் முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் இன்னுமொருவருக்கு அநீதி இழைக்கப்படுகின்றதா? என்பதை கவனத்தில் கொள்ளவும் வேண்டும். ஏனெனில், பலவிதமான செய்திகள் இருக்கையில் இடப்பற்றாக்குறை காரணமாக தெரிந்தெடுக்கப்பட்ட செய்திகளே பிரசுரிக்கப்படுவதால் எவருக்கும் அநீதி ஏற்படாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டியது கட்டாயமாகும்.

அண்மைக்காலங்களில் புதியதோர் அணுகுமுறை கையாளப்பட்டு வருகின்றது. அதாவது, குறித்த ஓர் அரசியல் பிரமுகர் பத்திரிகையில் கட்டணம் செலுத்தி விளம்பரம் செய்வாராயின் அவருக்கான ஒரு போனஸ் வாய்ப்பாக அவருக்கென பிரத்தியேக, செய்தி கட்டுரையொன்றை வழங்கும் பாணி தற்போது நடைமுறையில் இருந்து வருகின்றது. இது பத்திரிகைகள் தமது வருமான ஈட்டலுக்கு கையாளுகின்ற உபாயமாக கொள்ளப்படுகின்றது. ஆனால், இது மறைமுகமாக விலைபோதல் என்ற நிலைக்கு ஆளானதாக அமைதல் கூடாது. (தொடரும்)

-ரிஷபன்

வெல்லுங்கள்!

விஜய் – தூவானம் வழங்கும் 8GB Pen Drive பரிசு!!



4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருளும் பென்டிரைவ் உடன் இலவசமாக வழங்கப்படும்.

பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் 'ThooVaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

* 'ThooVaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

22.07.2015 'தூவானம்' கேள்விக்கான விடை:
1885
Pen Drive வெற்றியாளர்:
என். கஜந்த்,
பழைய தபால் கந்தோர் வீதி,
குருமண்வெளி - 12, களுவாஞ்சிக்குடி.

அனுப்பவேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(05.08.2015)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை
Write Message
F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்
(இச்சேவை முற்றிலும் இலவசம்)

Sponsored:
MY LOOK.LK
FB/Web: MyLook.lk
Twitter: MyLookLK
(The Online Women Clothing Store)

இவ்வார கூப்பன்:
05.08.2015
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுனர் டொரிங்டன் அவர்கள்

கி.பி 1847 இல் ஆளுனர் டொரிங்டன் அவர்கள் இலங்கைக்கு வந்தார். அவர் நிர்வாகத் திறமை யற்றவராகக் காணப்பட்டார். அத்தோடு, துரதிர்ஷ்டசாலியும் கூட. பெருந்தோட்டக் கைத்தொழிலில் புதிய வழிமுறையைக் கையாண்டார். அதன்படி, பிரித்தானியரையும் பிரித்தானிய செல்வந்தர்களையும் இங்கு வரவழைத்தார்.

மேலும் இவரின் அளவுக்கதிகமான வரி விதிப்பால் நாட்டின் வருமானம் அதிகரித்தது. ஆனால், மக்கள் பெருமளவு நெருக்கடிகளுக்கும் தொல்லைகளுக்கும் முகம் கொடுத்தனர். மிகக் கடுமையான ஆளுனர் என்ற அவப்பெயரையும் இவர் சம்பாதித்துக் கொண்டார். அது மட்டுமல்ல கோல்புறூக் கமரன் சீர்த்திருத்தத்தின் மூலம் ஒழிக்கப்பட்ட இராசகாரிய முறையை மீண்டும் கொண்டுவந்தமையும் இவரின் ஆட்சிக்காலத்தில் நடந்த முக்கிய நிகழ்வாகும். சுதேச மக்களாகிய இலங்கையரது முன்னேற்றம் இவரது ஆட்சிக்காலத்தில் மிகவும் மந்தநிலையை அடைந்தது. ஆள்பதி டொரிங்டன் அவர்களும் அவரின்கீழ் பணியாற்றிய நிறைவேற்று அதிகாரிகளில் பலரும் இலங்கையின் பாரம்பரியம் குறித்தும் பொருளாதாரம் குறித்தும் மக்களின் உண்மை நிலை குறித்தும் எதுவும் அறியாதவர்களாகவே இருந்தனர். நாடு குறித்த அவர்களது அறிவு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பாதைகளின் இரு மருங்குகளிலும் இருந்த மக்களைப் பற்றி மட்டுமே ஓரளவு அறிந்து வைத்திருந்தனர். நாட்டின் அபிவிருத்திக்காகவும் குறிப்பாக கொழும்பிலிருந்து தொலைவில் அமைந்திருந்த மாகாணங்களில் வாழும் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் மிகக் குறைந்தளவு பணமே செலவிடப்பட்டது. கொழும்பு மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அவர்களுக்கு உயர்ந்த கல்வித் தரத்தை வழங்கவும் அரசு அதிக பணத்தைச் செலவழித்தது. குறிப்பாக, கிறிஸ்தவ மக்களின் முன்னேற்றத்திற்காகவே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பெரும் காப்பியங்கள்




## சீவக சிந்தாமணி

| | |
|---|---|
| இயற்றியவர் | : திருத்தக்க தேவர் |
| இயற்றப்பட்ட காலம் | : கி.பி. 7 ஆம் நூற்றாண்டு |
| பாடல் வகை | : விருத்தப்பாக்கள் |
| கதாநாயகன் | : சீவகன் |
| கதாநாயகி | : எட்டு மனைவிமார் |




## சிலப்பதிகாரம்

| | |
|---|---|
| இயற்றியவர் | : இளங்கோவடிகள் |
| இயற்றப்பட்ட காலம் | : கி.பி. 2 ஆம் நூற்றாண்டு |
| காண்டங்கள் | : மூன்று |
| கதாநாயகன் | : கோவலன் |
| கதாநாயகி | : கண்ணகி |
| காதைகள் | : முப்பது |

## மணிமேகலை

| | |
|---|---|
| இயற்றியவர் | : சீத்தலைச் சாத்தனார் |
| இயற்றப்பட்ட காலம் | : கி.பி. 2 ஆம் நூற்றாண்டு (எனினும், இயற்றப்பில் இயற்றப்பட்ட காலம் தொடர்பில் முரண்பட்ட கருத்துக்களும் உள்ளன) |
| காதைகள் | : முப்பது |
| கதாநாயகி | : மணிமேகலை |







## வளையாபதி

| | |
|---|---|
| இயற்றியவர் | : (பெயர் அறியப்படவில்லை) |
| இயற்றப்பட்ட காலம் | : கி.பி. 9 ஆம் நூற்றாண்டு |
| கதாநாயகன் | : நவகோட்டி நாராயணன் |




## குண்டலகேசி

| | |
|---|---|
| இயற்றியவர் | : நாதகுத்தனார் |
| இயற்றப்பட்ட காலம் | : கி.பி. 7 ஆம் நூற்றாண்டு |
| கதாநாயகி | : குண்டலகேசி |

**ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களின் பெயர்களால் அமைந்தவையாகும்.**

- ★ தலையில் (கிரீடத்தில்) அணியப்படுவது - சிந்தாமணி
- ★ காதுகளில் அணியப்படுவது - குண்டலம்
- ★ கைகளில் அணியப்படுவது - வளையல்
- ★ காலில் அணியப்படுவது - சிலம்பு
- ★ இடையில் அணியப்படுவது - மணிமேகலை

தொகுப்பு: ஷாலினி

உங்கள் அபிமான
தமிழ்Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs.10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ்Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டில் இதுவ
# கண்டுபிடிக்கப்பட்ட உயிரினங்கள்

ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்படுகின்ற உயிரினங்களில், 10 உயிரினங்களை தெரிவுசெய்து, அவற்றை உலகிற்கு அறிமுகம் செய்துவைக்கும் நடவடிக்கையை அமெரிக்காவின் நியூ யோர்க் பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் மற்றும் வனஜீவிகள் கற்றல் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். இதன்படி, 2015 ஆம் ஆண்டில் உலகறியச் செய்யப்பட்ட உயிரினங்களாக பின்வருபவை குறிப்பிடப்பட்டுள்ளன.

## சக்கர சிலந்தி



இந்த சிலந்தியின் விஞ்ஞானப் பெயர் *Cebrennus rechenbergi* என்பதாகும். மொரொக்கோவின் ஏர்க் ச்செப்பி பாலைவனத்திலிருந்தே இந்த சிலந்தி இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர். 2015 ஆம் ஆண்டின் புதிய உயிரினங்களின் பட்டியலில் இந்த சிலந்தி இனம் முதலிடத்தினை வகிக்கின்றது. அதற்குக் காரணம், இந்த சிலந்தியிடம் காணப்படும் ஒரு விசேட அம்சமாகும். அதாவது, ஆபத்துக்களின்போதோ அல்லது எதிரிகளை எதிர்கொள்ளும்போதோ இந்த சிலந்தி தனது உடலை பெருப்பித்துக்காட்டி எதிரிகளை அச்சுறுத்துகின்றது. அந்த முயற்சி தோல்வியடையும்போது, ஒரு வண்டிச் சக்கரம் போன்று சுழன்று சென்று இது தப்பித்துக்கொள்கிறது. இதனால்தான் இதனை 'சக்கர சிலந்தி' என்று அழைக்கின்றனர்.

## சேவ
## டைனே



*'Anzu wyliei'* என்ற விஞ்ஞானப் பெயரில் அ
டும் இந்த உயிரினம், சிறகுகள் கொண்ட டை
அமெரிக்காவின் தென் டெகோட்டா பகுதியி
ளப்பட்ட அகழ்வுப்பணிகளின்போதே, இதன்
கண்டறியப்பட்டது. இந்த உயிரினம் பறவைய
டைனோசரினதும் கலப்பினமாகும். சேவலை
தோற்றத்தினைக் கொண்டது. 2015 ஆம் ஆண்
உயிரினங்களின் பட்டியலில் இந்த டைனோச
இணைத்துக்கொள்ளப்படுவதற்கும் இதுவே
250 கிலோகிராம் எடை கொண்ட இந்த டைனே
மிகவும் கொடிய சுபாவம் கொண்டது.




## மாறுவேடத் தாவரம்

இதுவோர் ஒட்டுண்ணித் தாவர இனமாகும். *Balanophora coralliformis* என்பது இதன் விஞ்ஞானப் பெயராகும். பிலிப்பைன்ஸின் மிங்கன் மலைப்பகுதி சார்ந்த இடங்களில் இவ்வகை ஒட்டுண்ணித் தாவரங்களைக் காண முடியும். பவளப்பாறை போன்ற தோற்றம் கொண்ட இவ்வகைத் தாவரங்களில் சுமார் 50 இனங்கள் வரை தற்போதளவில் கண்டறியப்பட்டுள்ளன. கடல் மட்டத்தில் இருந்து 5,600 மீற்றர் உயரமான ஈரலிப்பான இடங்களில் இவை வளர்கின்றன.



## முட்டையிடாத தவளைகள்



தவளைகள் முட்டையிட்டே இனப்பெருக்கம் செய்கின்றன. அந்த முட்டைகள் பேத்தைகளாகி வளர்கின்றன. ஆனால், முட்டையிடாமல் நேரடியாக பேத்தைகளை ஈனும் தவளைகள் அண்மையில் கண்டறியப்பட்டுள்ளன. *Limnonectes larvaepatus* என்பது இதன் விஞ்ஞானப் பெயராகும். இவற்றை இந்தோனேஷியாவின் தென் சுலவெசி தீவுப்பகுதியில் காணலாம். 'இந்தோனேஷிய கொம்புத் தவளை' என்று

## மர்மமான காளான்

இதுவொரு கடல்வாழ் உயிரினமாகும். பார்வைக்கு புதைபடிமம் போன்றிருக்கும். *Dendrogramma enigmatica* என்பது இதன் விஞ்ஞானப் பெயராகும். அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்திற்கு அப்பால் ஹிக்ஸ் முனைக்கு அருகாமையில் உள்ள ஆழ்கடல் பகுதியில் இந்த அபூர்வமான உயிரினம் கண்டறியப்பட்டுள்ளது. வெளித் தோற்றத்தில் காளான் போன்று தெரிந்தாலும் உட்புறத்தில் வயிற்றுப்பகுதியும் அதனை வேறுபடுத்தும் வகையில் அடர்த்தியான திரவத்தினையும் காணலாம். இவை சுமார் 600 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து-அழிந்து போன உயிரின வகைகளில் தப்பிய இனமாக இருக்கக்கூடும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவின்
2015
ா
ாகும்.
லந்தி

# சேவல் டைனோசர்

ன்ற விஞ்ஞானப் பெயரில் அழைக்கப்ப
ம், சிறகுகள் கொண்ட டைனோசராகும்.
தென் டெகோட்டா பகுதியில் மேற்கொள்
ப்பணிகளின்போதே, இதன் புதைபடிமம்
ு. இந்த உயிரினம் பறவையினதும்
கலப்பினமாகும். சேவலைப் போன்ற
கொண்டது. 2015 ஆம் ஆண்டு புதிய
ட்டியலில் இந்த டைனோசர் இனம்
ள்ளப்படுவதற்கும் இதுவே காரணமாகும்.
டை கொண்ட இந்த டைனோசர்,
சுபாவம் கொண்டது.








# துவரை
# ங்கள் சில....



## ரம்

கும்.
விஞ
ங்கன்
கை
யும்.
ட
ங்கள்
ள்ளன.
பரமான
றன.



0

ல

## நடக்கும் குச்சி

*Phryganistria tamdaoensis* என்பது இதன் விஞ்ஞானப் பெயராகும். வியட்நாமின் டாம் டோ தேசிய வனப்பகுதியிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது. இவை சாதாரண பூச்சி இனத்திலைவிட அளவில் பெரியதாகும். 9 அங்குலம் நீளம் கொண்டது.

## வடிவங்கள் அமைக்கும் மீன்கள்


White-Spotted Pufferfish எனப்படும் இந்த மீன் இனமானது, *Torquigener albomaculosus* என்ற விஞ்ஞானப் பெயரால் அழைக்கப்படுகிறது. ஆழ் கடலினுள்ளே மணல் பகுதியில் கண்ணைக் கவரும் வகையில் வடிவங்களை அமைக்கும் இந்த மீன்களை, ஜப்பானின் அமாமி ஒஷிமா தீவுப்பகுதியின் கடல் பகுதிகளில் காணலாம். ஆழ் கடலில் மணல் வடிவங்களைக் கண்ட நீச்சல் வீரர்களும் கடல் ஆய்வு விஞ்ஞானிகளும், சுமார் 20 வருடங்களாக குழப்பத்தில் ஆழ்ந்திருந்தனர். எனினும், இந்த மீன் இனம்தான் இதற்கு காரணம் என்று தற்போதளவில் கண்டறியப்பட்டுள்ளது. ஆழ்கடலின் மணற்பரப்பில் அமைக் கப்படும் இந்த வடிவங்களே, இவ்வகை மீன்களின் வாழ்விடமாகும்.

## கொடிய குளவி

*Deuteragenia ossarium* என்ற விஞ்ஞானப் பெயரினால் அழைக்கப் படுகின்ற இந்த கொடிய குளவி இனம், சீனாவின் குட்டியான்ஷான் வனப்பகுதியில் உள்ளது. இரைகளைப் பிடிப்பதில் திறமைமிக்க இந்த குளவி இனம் 15 மில்லிமீற்றர் அளவு கொண்டது. தாய்க் குளவி வெற்று மரத் தண்டுகளுக்குள் மண்ணினைக் கொண்டு சுவர்களை அமைத்து குடும்பத்தினைப் பாதுகாக்கும். மற்றைய பொந்துகளை இரைகளைப் பிடிக்கும் இடமாகப் பயன்படுத்திக்கொள்ளும். இவை சிலந்திகள் மற்றும் இதர பூச்சி இனங்களைப் பிடித்து உணவாகக்கொள்ளும்.

## ஓடில்லா நத்தை

*Phyllodesmium acanthorhinum* எனும் விஞ்ஞானப் பெயரில் அழைக் கப்படும் இவை, ஜப்பான் கடலில் வாழும் கடல் நத்தை இனமாகும். கடல் தாவரங்களினதும் கடல் நத்தைகளினதும் மறைந்துபோன மூதாதை இனமாக இந்த ஓடில்லா நத்தை இனம் கருதப்படுகின்றது. 17 முதல் 28 மில்லிமீற்றர் அளவினைக் கொண்டது.




## நத்தார் அலங்காரம்

*Tillandsia religiosa* என்பது இதன் விஞ்ஞானப் பெயராகும். மெக்ஸிகோவின் வடபகுதி மொரேலஸ் பகுதியில் இத்தாவரத்தினைப் பரவலாகக் காணமுடியும். மெக்ஸிகோ கிறிஸ்தவர்கள் நத்தார் தினத்தன்று இந்த மரத்திலேயே நத்தார் அலங்காரங்களை செய்கின் றனர். இத்தாவரம், அன்னாசி புதரைப் போன்றது. 5 அடி உயரத்திற்கு வளரக்கூடியது. கடல் மட்டத்திலிருந்து 1,800 மீற்றர் முதல் 2,100 மீற்றர் உயரத்திலான மலைச்சரிவுகளில் வளரும்.

- பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்வெளியில் அதிக நாட்கள் தங்கியிருந்த விண்வெளி வீரர்

*ரஷ்ய நாட்டு விண்வெளி வீரரான கெனடி பெடல்கா* (**Gennady Padalka**); *விண்வெளியில் தனிநபராக நீண்ட நாட்கள் தங்கியிருந்து சாதனை படைத்துள்ளார். அந்தவகையில், பூமியின் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் அவர் 804 நாட்கள் தங்கியிருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*



சர்வதேச விண்வெளி நிலையத்தில் பெடல்கா

## முறியடிக்கப்பட்ட சாதனை


இதற்கு முன்னர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 803 நாட்கள்வரை தனிநபர்ாகத் தங்கியிருந்து சாதனை படைத்தவரும் ரஷ்ய நாட்டு விண்வெளி வீரர் ஒருவரே ஆவார். அவர்தான் சர்கே க்றிகலேவ். தற்போது இவரைவிட ஒருநாள் மேலதிகமாக விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்து, கெனடி பெடல்கா அந்த சாதனையை முறியடித்துள்ளார். கடந்த 5 மாதங்களாக விண்வெளி நிலையத்தில் தனிநபராக தங்கியிருப்பது மட்டுமன்றி, கட்டளையிடும் அதிகாரியாகவும் பெடல்கா செயலாற்றுகின்றார்.



கெனடி பெடல்கா

## கெனடி பெடல்கா

51 வயதான கெனடி பெடல்கா, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி பூமிக்குத் திரும்பவுள்ளார். அப்போது அவர் விண்வெளியில் தங்கியிருந்த நாட்களின் எண்ணிக்கை 878 ஆக அதிகரித்திருக்கும் என்று ரஷ்ய ஃபெடரல் விண்வெளி நிறுவனம் சுட்டிக்காட்டுகின்றது. பெடல்கா,தனது 51 ஆவது பிறந்தநாளை கடந்த ஜூன் மாதம் 21 ஆம் திகதி விண்வெளியில் கொண்டாடினார். சோவியத் தேசம் நிலவிய காலத்தில், ராணுவ விமானியாக பயிற்சி பெற்ற பெடல்கா, முதன்முதலில் விண்வெளிக்குச் சென்றது 1998 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 13 ஆம் திகதி ஆகும். ரஷ்யாவின் மிர் விண்வெளி நிலையத்திற்கே அவர் முதலில் சென்றிருந்தார்.



சர்கே க்றிகலேவ்

## சர்வதேச விண்வெளி நிலையம்

சர்வதேச விண்வெளி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 1990 களில் ஆரம்பிக்கப் பட்டன. இந்த நிர்மாணப்பணிகளுக்கு அமெரிக்கா தலைமை தாங்கியது. உலகின் அனைத்து விண்வெளி ஆய்வு நிறுவனங்களும் இந்த பணிகளுக்கு உதவி புரிந்தன. 2000 ஆம் ஆண்டளவில் விண்வெளி வீரர்கள் அங்கு தங்குவதற்கான வசதி செய்யப்பட்டது. 2012 இல் அனைத்து நிர்மாணப்பணிகளும் பூர்த்தி அடைந்தன. இப்பொழுது 3 மாதங்களுக்கு ஒரு தடவை, மூன்று விண்வெளி வீரர்கள் அடங்கிய குழுவொன்று சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு விஜயம் மேற்கொள்கின்றது. அவ்வாறு செல்லும் விண்வெளி வீரர்கள் அங்கு பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்றனர்.

## மிர் விண்வெளி நிலையம்

1986 இல் ரஷ்யாவினால் விண்வெளிப் பரப்பில் நிலைநிறுத்தப்பட்ட மிர் விண்வெளி நிலையம், பத்தாண்டுகளுக்கு மேலாக செயல்பட்டது. 1997 இல் எதிர்பாராத விதமாக ஆளில்லா போக்குவரத்து விமானத்துடன் அது மோதி விபத்துக்குள்ளானது. இது 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி துண்டுகளாக சிதறி பூமியில் விழுந்தது.

-(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களை தவிர்க்கும் 'சேஃப்டி டிரக்ஸ்'




பாதைகளில் வாகனங்கள் வரிசையாக செல்லும்போது, முன்னே செல்லும் வாகனம் அளவில் பெரியதாக இருப்பின் அதன் பின்னால் வருகின்ற வாகனத்திற்கு வீதியை சரிவர பார்க்க முடியாத நிலைமை இருப்பதுண்டு. இதனால், பல விபத்துக்களும் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. எனவே, இத்தகைய வீதி விபத்துக்களை தவிர்க்கும் நோக்குடன் தமது தொலில்நுட்பத்திறனை பயன்படுத்தி புதியதோர் வழிமுறையை 'செம்சுங்' நிறுவனத்தினர் அறிமுகப்படுத்தியுள்ளனர்.



அதாவது, வீதியில் செல்லும் வாகனத்தின் பின்புறத்தில் காட்சித் திரையொன்றை பொருத்தியுள்ளனர். எனவே, இந்த வாகனத்திற்கு பின்னால் வருகின்ற வாகனத்தை ஓட்டுபவர் முன்னே என்ன நடக்கின்றது என்பதை இத்திரையில் பார்த்தவாறு வாகனத்தை செலுத்த முடியும். இந்த புதிய தொழில்நுட்பத்தைப் பெரிய டிரக் வண்டிகளுக்குப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி பின்புறம் பொருத்தப்பட்டிருக்கும் அகன்ற திரையின்மூலம் ஒளி ஊடுருவி இலகுவாக பின்புறமாகப் பயணிக்கும் வாகனத்திற்கு முன்பக்க நிகழ்வுகளை காணக்கூடியதாக இருக்கும்.

'சேஃப்டி டிரக்ஸ் (Safety Trucks) என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்படும் இத்தகைய வாகனங்கள் விபத்துக்களை பெருமளவு குறைக்கும் என செம்சுங் நிறுவனம் தெரிவித்துள்ளது. அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கெமராத் தொகுதி, நாடா இல்லாத வீடியோ எடுக்கும் முறை, அகன்ற தட்டையான திரை என்பனவற்றின் காரணமாக, பின்பக்கமாக வரும் வாகனங்களுக்கு எந்த சிரமமும் இன்றி முன்னே செல்லும் வாகனத்தை முந்திச் செல்ல முடியும். வாகனத்தின் முன்பக்கம் பொருத்தப்பட்டிருக்கும் நாடா இல்லாத கெமரா மூலம் பெற்றுக்கொள்ளப்படும் முன்புறக் காட்சிகளை நேரடியாக டிரக் வண்டியின் பின்புற மொனிட்டர்களுக்கு பெற்றுக் கொடுப்பதன்மூலம் தெட்டத் தெளிவான காட்சிகளை திரைக்குப் பெற்றுத் தருகின்றது.

விபத்துக்கள்ள தவிர்ப்பதற்கு மிகவும் சிறந்த முறையாக இது இருப்பதால் உலகின் பல்வேறு நாடுகளில் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் மூலம் இதற்கான அனுமதியை 'செம்சுங்' பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**(ஆர்.ஜே)**

# 2 மில்லியன் வருட பழமையான விளையாட்டுத் திடல் கண்டுபிடிப்பு

சீனாவில் இரண்டு மில்லியன் வருடங்கள் பழமைவாய்ந்த விளையாட்டுத் திடலொன்றின் சிதைவுகளை தொல்பொருள் ஆய்வுக்குழுவொன்று அண்மையில் கண்டுபிடித்துள்ளது. பெபெய் மாகாணத்தின் நினேவான் சமவெளிப் பகுதியில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின்போதே இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு ஆறு சதுர மீற்றரிலும் குறைவான சிறியதோர் இடத்திலிருந்து கற்களால் தயாரிக்கப்பட்ட 700 க்கும் அதிகமான தொல்பொருட்கள் ஆய்வுக்குழுவினருக்கு கிடைத்துள்ளன. இவை இற்றைக்கு 1.77 மில்லியனுக்கும் 1.95 மில்லியன் வருடங்களுக்கும் இடைப்பட்ட மிகத் தொன்மைக் காலப் பகுதி மக்களால் விளையாட்டு உபகரணங்களாக இவை பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.






இந்த ஆய்வுக் குழுவில் விசேட நிபுணத்துவம் பெற்ற புவிமானிட விஞ்ஞானியான வெய்குஷி என்பவரின் கருத்தின்படி, இக்கண்டுபிடிப்பானது, மிகவும் பெறுமதியானது என்றும் இதன்மூலம் மனிதனுடன் தொடர்புடைய ஆதிகால சமூகம் குறித்தும் அவர்கள் ஆபிரிக்காவில் இருந்து ஆசியாவிற்கு எவ்வாறு வந்தார்கள் என்பது குறித்தும் தெளிவாக அறிந்துகொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். 'ஹெய்ட்டுகொயு' என பெயரிடப்பட்டுள்ள இந்த பிரதேசத்தினுள் கிடைத்துள்ள தொல்பொருட்களிடையே சிறிய வகையான பொருட்கள் மாத்திரம் 20,000 வரை இருக்கும் என்றும் கூறப்படுகின்றது. அத்தோடு, அவற்றில் பெரும்பாலானவை 20 இற்கும் 50 மில்லி மீற்றருக்கும் இடைப்பட்ட அளவைக் கொண்டதாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**(-அ)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்

ஆயுபோவன்

வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**අම්මා:** **දුව! හවසට නැන්දව බලන්න යන්න ඕනේ.**
துவ! ஹவசட்ட நெந்தவ பளன்ன யன்ன ஓனே.
அம்மா: **மகள்! பின்னேரம் மாமியை பார்க்கப் போக வேண்டும்.**

**දුව:** **ඇයි අම්මේ.. නැන්දට මොකද?**
எய் அம்மே... நெந்தட்ட மொகத?
மகள்: **ஏன் அம்மா... மாமிக்கு என்ன?**

**අම්මා:** **නැන්දට කොන්ද අමාරුලු.**
நெந்தட்ட கொந்த அமாருலு.
அம்மா: **மாமிக்கு முதுகு வலியாம்.**

**දුව:** **කොන්දේ අමාරුව..? ඒ මොනව වෙලාද?**
கொன்தெ அமாருவ...? ஏ மொனவ வெலாத?
மகள்: **முதுகு வலியா? என்ன நடந்தது?**

**අම්මා:** **එයාට ඉස්සර ඉඳලම කොන්දේ අමාරු තිබුණනේ.**
எயாட்ட இஸ்ஸர இந்தலம கொன்தெ அமாருவ திபுனனே.
அம்மா: **அவருக்கு முன்பிருந்தே முதுகு வலி இருந்ததுதானே.**

**දැන් හොඳටම අමාරුලු.**
தென் ஹொந்தட்டம அமாருலு.
**இப்போது மிகவும் வருத்தமாம்.**

**දුව:** **නැන්දා බෙහෙත් අරගෙන නැද්ද?**
நெந்தா பெஹெத் அரகென நெத்த?
மகள்: **மாமி மருந்து எடுத்ததில்லையா?**

**අම්මා:** **දැන් සිංහල බෙහෙත් කරනවලු.**
தென் சிங்ஹல பெஹெத் கரனவலு.
அம்மா: **இப்போது ஆயுர்வேத மருந்து செய்கிறாராம்.**

**දුව:** **සිංහල බෙහෙත් කරන්න හරි අමාරුයිනේ.**
சிங்ஹல பெஹெத் கரன்ன ஹரி அமாருய்னே.
மகள்: **ஆயுர்வேத மருந்து செய்வது மிகவும் கஷ்டம்தானே.**

**අම්මා:** **ඔව්. ඒ වුනාට සිංහල බෙහෙත් කරන එක හොඳයි.**
ஒவ். ஏ வுனாட சிங்ஹல பெஹெத் கரன எக ஹொந்தய்.
அம்மா: **ஆம். ஆனாலும் ஆயுர்வேத மருந்து செய்வது நல்லது.**

**දුව:** **අපි කීයටද යන්නේ අම්මේ?**
அப்பி கீயட்டத யன்னே அம்மே?
மகள்: **நாங்கள் எத்தனை மணிக்குப் போவது அம்மா?**

**අම්මා:** **සවස හතරට විතර යමු.**
சவஸ ஹதரட்ட விதர யமு.
அம்மா: **பின்னேரம் நான்கு மணியளவில் போவோம்.**



**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. மாமிக்கு என்ன?
..........................................

ii. மருந்து எடுக்கவில்லையா?
..........................................

iii. பின்னேரம் போவோம்.
..........................................




## Simple Sentence and Compound Sentence
## தனி வாக்கியம் மற்றும் கூட்டு வாக்கியம்

இணைக்கும் சொற்களைக் (Conjunctions) கையாண்டு, தனித்தனி வாக்கியங்களை எவ்வாறு ஒரு கூட்டு வாக்கியமாக அமைக்கலாம் என்பதை, தகுந்த உதாரணங்கள் மூலம் மேலும் இங்கே பயில்வோம்.

அ) They sat on the top of the tree.
அவர்கள் மரத்தின் உச்சியில் அமர்ந்தனர்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஆ) They watched the animals.
அவர்கள் மிருகங்களை அவதானித்தனர்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

இ) They sat on the top of the tree and watched the animals.
அவர்கள் மரத்தின் உச்சியில் அமர்ந்து, மிருகங்களை அவதானித்தனர்.
(கூட்டு வாக்கியம்-Compound Sentence)

ஈ) We finished our lessons.
நாங்கள் எங்கள் பாடங்களை முடித்தோம்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

உ) We went home.
நாங்கள் வீட்டுக்குச் சென்றோம்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஊ) We finished our lessons and went home.
நாங்கள் எங்கள் பாடங்களை முடித்து, வீட்டுக்குச் சென்றோம்.
(கூட்டு வாக்கியம்-Compound Sentence)

எ) Ranjith borrowed some money.
ரஞ்ஜித் கொஞ்சம் பணம் கடன் வாங்கினான்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஏ) He gave it to his friend.
அவன் அதை தனது நண்பனுக்குக் கொடுத்தான்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஐ) Ranjith borrowed some money and gave it to his friend.
ரஞ்ஜித் கொஞ்சம் பணம் கடன்வாங்கி, அதை தனது நண்பனுக்குக் கொடுத்தான்.
(கூட்டு வாக்கியம்-Compound Sentence)

அ) Sunil went to the bank.
சுனில் வங்கிக்குச் சென்றான்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

ஆ) He spoke to the manager.
அவன் முகாமையாளருடன் கதைத்தான்.
(தனி வாக்கியம்-Simple Sentence)

இ) Sunil went to the bank and spoke to the manager.
சுனில் வங்கிக்குச் சென்று, முகாமையாளருடன் கதைத்தான்.
(கூட்டு வாக்கியம்-Compound Sentence)

* Sit - நிகழ்கால வினைச்சொல் (Present tense verb)
Sat - இறந்தகால வினைச்சொல் (Past tense verb)

* Speak - நிகழ்கால வினைச்சொல் (Present tense verb)
Spoke - இறந்தகால வினைச்சொல் (Past tense verb)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொட்ஸ்வானா

*முற்றிலும் நிலப்பரப்பால் சூழப்பட்ட பொட்ஸ்வானா 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவின் குடியேற்ற நாடாகியது. பெச்சுஅனாலாந்து என அழைக்கப்பட்ட இந்த நாடு 1966 செப்டெம்பர் 30 ஆம் திகதி சுதந்திரமடைந்த பின் பொட்ஸ்வானா என அழைக்கப்படுகின்றது. ஆபிரிக்காவில் மிகவும் உறுதியான பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக பொட்ஸ்வானா திகழ்கின்றது. எனினும், அதிக எய்ட்ஸ் நோயாளிகளைக் கொண்ட நாடாகவும் காணப்படுகின்றது. பொட்ஸ்வானா ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மற்றும் பொதுநலவாய அமைப்பு ஆகியவற்றில் அங்கம் வகிக்கின்றது.*

கலங்கா உள்ளிட்ட பல்வேறு கோத்திரத்தைச் சார்ந்தவர்கள்.

புஷ்மன் அல்லது வனவாசிகள் அங்கு வாழ்கின்றனர்.



பாரம்பரிய உடை.

உலகப் புகழ்பெற்ற கலஹாரி பாலைவனம் பொட்ஸ்வானாவில் அமைந்துள்ளது.

உயர் உயிரின பல் வகைமை கொண்ட ஒக்கவென்கோ நதிக்கழிமுகமும் அங்கு உள்ளது.

1816 இல் இங்கு வந்த பிரித்தானியர்கள், தங்கள் மதத்தை இங்கு பிரச்சாரம் செய்தனர்.

புலா என்பது அந்நாட்டின் நாணயமாகும்.

சோளம், திணை ஆகிய தானிய வகைகள் அந்நாட்டில் பயிரிடப்படுகின்றது.


1966 இல் அந்நாடு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் அடைந்தது.

பாரம்பரிய நடனம்.

## தேசிய மிருகம், மலர், பறவை

தேசிய மிருகம் - வரிக்குதிரை
தேசிய மலர் - ரோஜாப்பூ
தேசிய பறவை - லிலெக் ப்ரெஸ்டட் ரோலர்

## இனங்கள்




## மொழிகள்

செட்ஸ்வானா 78%
கலங்கா 7.9%, செக்கலகாதி 2.8%
ஆங்கிலேயர் 2.1%, ஏனையோர் 8.6%

## சமயங்கள்

கிறிஸ்தவர் 71.6%, பட்மோ 6%
ஏனையோர் 1.4%, குறிப்பிடாதோர் 0.4%
சமயமற்றோர் 20.6%




## அரசியல்

நாடாளுமன்றக் கட்டடம்.



ஜனாதிபதி இஅன் பாமா

## இயற்கை வளம்

வைரம், செம்பு, நிக்கல், பொட்டேஷ், நிலக்கரி, பழுப்பு, இரும்பு, வெள்ளி

சுதந்திரத்தின் பின் அந்நாட்டில் பெருமளவு வைரங்கள் கிடைத்தன. பெருந்தொகையான பாரிய சுரங்கங்கள் இங்கு உள்ளன.

பாரம்பரிய வைத்திய முறைகளும் யாகம், ஹோமம் போன்றவைகளும் அந்நாட்டில் நம்பிக்கைக்குரிய விடயங்களாக உள்ளது.

ஆடைகளை தைக்கும் தொழில் முக்கிய வருமானத் துறையாகும்.

ப்ளொக் கல் தயாரிப்பு அங்கு வீட்டுக் (குடிசைக்) கைத்தொழிலாகும்.

நிலக்கரியும் பெருமளவு காணப்படுகின்றது.

பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் அங்கு செல்கின்றனர்.

## தலைநகரம்

இறைச்சி மற்றும் பாலுக்காக மாடுகளை வளர்ப்பது பிரதானமான தொழிலாக உள்ளது.

மரக்கறி மற்றும் பழவகைகளின் பயிர்ச் செய்கைக்கு மேலதிகமாக புகையிலை மற்றும் கோப்பிப் பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

## ஏன் எப்படி

**கேள்வி:** புரோட்டீன் உணவுகள் வாயில் சமிபாடடைவதில்லை. மாச்சத்து மற்றும் இனிப்பான உணவுகள் கல்லீரலில் சமிபாடடைவதில்லை. அது ஏன்?

**பதில்:** உணவு சமிபாடடைவதற்கு அந்தந்த உணவுகளுக்குரிய 'என்சைம்கள்' இருக்க வேண்டியது அவசியமாகும். அதுமட்டுமன்றி, அந்தந்த 'என்சைம்கள்' செயலாற்றுவதற்கு சில வகை அமிலங்களும் தேவைப்படுகின்றன. வாயில் உள்ள எச்சிலில் (உமிழ்நீர்) அமிலத்தன்மை சற்று காணப்படுகின்றது. மாச்சத்துக்களை ஜீரணிக்க தேவையான அமைலெஸ் என்சைமம் எச்சிலில் காணப்படுவதுடன் அது அமிலத்தன்மை Ph ஆக செயற்படுவதில்லை. இதனால், வாய் பகுதியில் மாச்சத்து ஜீரணமடைவது ஆரம்பமாகின்றது. கல்லீரலில் 'ஹைட்ரோலிக்' அமிலம் காணப்படுவதனால் கல்லீரலில் உள்ள அமில Ph உள்ளதனால், அங்கு மாச்சத்தில்உள்ள அமைலெஸ் என்சைமம் செயற்பட மாட்டாது. சுக்ரோஸ் போன்ற சீனியினை ஜீரணிக்கும் சுக்ரோஸ் என்சைமமும் அமில Ph இல் செயலாற்றுகின்றது. பரோட்டீனுக்குத் தேவையான அமில Ph அளவு மற்றும் புரோட்டீனின் என்சைமம் கல்லீரலில் அன்றி வாயில் ஜீரணமாக மாட்டாது.



## தெரிந்து கொள்வோம்

* செவ்வக இலக்கங்கள் என்றால் என்ன?

நிரைகளிலும் நிரல்களிலும் செவ்வக வடிவில் பூர்த்தி செய்யக்கூடிய இலக்கங்கள் செவ்வக இலக்கங்களாகும்.

i. 2 [○○] ii. 4 [○○ / ○○]

iii.6 [○○○ / ○○○] iv. 8 [○○○○ / ○○○○]

* கிரிக்கெட்டில் 'பவர்பிளே' என்றால் என்ன?



களத் தடுப்பாளர்கள் 9 பேர் 27 மீற்றர் தூர சுற்று வட்டத்துள் நிற்க, 2 பேர் அதற்கு வெளியே நிற்க வேண்டும். இது ஒருநாள் போட்டிகளில் 1996 இல் அறிமுகமான முறையாகும். முதல் 10 ஓவர் கட்டாய பவர் பிளேயாகும். பின்னர் 5 ஓவர்களை துடுப்பாட்ட அணி தெரிவுசெய்ய முடியும்



* சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உண்டென்பதை கண்டறிந்து கூறியவர் யார்?

ஐசெக் நியூட்டன்

* தென் கிழக்குத் திசையைவேறு என்ன பெயரால் அழைக்கலாம்?

அக்கினி மூலை

* புழக்கத்திலுள்ள 5000 ரூபா நாணயத் தாளில் காணப்படும் காவற்கல் எங்கேயுள்ள காவற்கல்லாகும்?



அனுராதபுரத்திலுள்ள "ரத்ன பிரசத' காவற்கல்லாகும்

* இராமனை காட்டிற்கு அனுப்பி தனது மகன் நாடாள வேண்டுமென விரும்பிய தாய் யார்?

கைகேயி



* இந்திய அரசின் 'காந்தி விருது' மற்றும் பிலிப்பைன் நாட்டின் 'மக்காசே' விருதுகளை பெற்ற இலங்கையர் யார்?

சர்வோதய இயக்கத் தலைவர் ஏ.டி. ஆரியரத்தின்

* சுதந்திர இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சர் யார்?

நுகவல



தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான விளக்கம்



1. அதிர்ச்சி தரும் சம்பவங்கள் ஏற்படும்போது, இதயம் வேகமாகத் துடிக்கின்றது.

அதிர்ச்சி ஏற்படும்போது, அதிரனிலின் சுரப்பி தூண்டப்பட்டு அதிரனிலின் எனும் ஓமோன்களை குருதியினுள் விடுகிறது. இதுவே இதயத்தை வேகமாகத் துடிக்கத் தூண்டுகின்றது.



2. நன்மை பெறும் நோக்குடன் விவசாயிகள் பீடைக் கொல்லியைப் பயன்படுத்தியபோதிலும் அவற்றினால் தீய விளைவுகளும் ஏற்படுகின்றன.

பீடைக் கொல்லிகள் பல விலங்குத் தாவரங்களால் பிரித்தெடுக்கப்படமாட்டாது. தாவரங்களால் உறிஞ்சியெடுக்கப்பட்ட பீடைக் கொல்லிகள் மனித உடற் தொழிற்பாடுகளைப் பாதிக்கும்.

3. மனிதனுக்கு இதய நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்.



கொழுப்பு உணவுகளில் உள்ள கொலஸ்ரோல் எனும் பதார்த்தம் நாடி, நாளங்களில் படிவதால் அதன் உள்விட்டம் குறைவடைகின்றது. இதனால், குருதி அமுக்கம் ஏற்பட்டு இதயம் களைப்படைகின்றது. இதன் காரணமாகவே இதய நோய்கள் ஏற்படுகின்றன.

# புதிய இனப்பறவை ஒன்று கண்டுபிடிப்பு

பிலிப்பைன்ஸ் நாட்டின் லூசோன் (Luzon) தீவில், இதுவரை இனங்காணப்படாத புதிய பறவை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் உயிரியல் கற்கும் மாணவர் ஒருவரால் இனங்காணப்பட்ட இந்த பறவைக்கு Ground-Warbler என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.



பலம் இழந்த செட்டைகளுடனும், பலம் வாய்ந்த கால்களுடன் இருக்கும் இந்த பறவை மிகக் குறுகிய தூரம் மட்டுமே பறக்கக் கூடியது. ஆனால், மிகவும் உயர்ந்த சத்தத்தில் கீச்சிடக்கூடியது. அத்தோடு, அருகில் இருந்து இப்பறவை கீச்சிட்டாலும் தூரத்தில் இருந்து கீச்சிடுவது போன்றே கேட்குமாம். இப்பறவையின் சகோதர இனங்கள் எது என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. இது பரிணம வளர்ச்சியின் அடுத்த கட்டத்தை எய்தி இருக்கக்கூடிய பறவை இனமாக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

# இது இப்படி?






- புவி எனப்படுவது செவ்வாய்க்கும் வெள்ளிக் கிரகத்திற்கும் இடையில் அமைந்துள்ள ஒரு கோள் ஆகும்.
- புவியின் துணைக்கோள் சந்திரனாகும்.
- பூமியின் மொத்தப் பரப்பளவு 3.132 பில்லியன் கிலோமீற்றர்கள் ஆகும்.
- பூமி தன்னைத்தானே சுற்றுவதற்கு 23.9345 மணித்தியாலம் தேவைப்படுகின்றது.
- புவியில் 1.2 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் முதலாவதாகத் தோற்றம் பெற்ற உயிரினம் 'ஜெலிபியஸ்' ஆகும்.

எஸ்.தர்ஷினி, நானோயா டிவிசன், தலவாக்கலை.

# முக்கிய நிகழ்வுகள்









- ★ கொன்ஸ்தாந்து நோபிள் துருக்கியர் வசமானது - 1453
- ★ வாஸ்கொடகாமா இந்தியாவுக்கு வந்தது - 1498
- ★ மகலன் உலகை வலம் வந்தது - 1519
- ★ கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்தது - 1492
- ★ சுயஸ் கால்வாய் வெட்டப்பட்டது - 1867
- ★ பனாமாக் கால்வாய் வெட்டப்பட்டது - 1494
- ★ ரஷ்யப் புரட்சி ஏற்பட்டது - 1914
- ★ ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது - 1945
- ★ பனாமாவை பல்போவா கண்டுபிடித்தது - 1513
- ★ ஹட்சன் நதியை ஹென்றி ஹட்சன் கண்டுபிடித்தது - 1609
- ★ மிசிசிப்பி நதியை ஜொலைட் கண்டுபிடித்தது - 1573

# வாரம் ஓர்... ஆத்திசூடி



## உ - உடையது விளம்பேல்

### தொடர் விளக்கக் கட்டுரை

'ஞானவள்ளி' ஔவையார் அகிலத்தாருக்கு மனமுவந்து அளித்த மற்றுமொரு அறவுரை 'உடையது விளம்பேல்' என்பதாகும்.

'உடையது' என்னும் சொல் ஒருவரிடத்தில் உள்ள ஏதோ ஒன்றை குறிப்பிடுவதாக அமைகின்றது. அது பொருளாக இருக்கலாம். இன்றேல் உள்ளத்தில் உள்ள எண்ணமாகவோ, சிந்தனையாகவோ அல்லது இரகசியமாகவோ இருக்கலாம். 'விளம்புதல்' என்பது 'சொல்லுதல்' என்ற பொருளைத் தரும். 'விளம்பேல்' என்றால் சொல்ல வேண்டாம் எனப் பொருளாகும். ஆகவே 'உடையது விளம்பேல்' என்று கூறும்பொழுது உள்ளதைச் சொல்லாதே எனப் பொருள்படுகின்றது. அப்படியானால் 'உண்மையைச் சொல்லாதே; 'பொய்யைச் சொல்' என்றுரைக்கின்றாரா ஔவையார்?

இல்லை! மனித வாழ்க்கையில் இரகசியங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய சில சந்தர்ப்பங்கள் உள்ளன. அந்த இரகசியங்கள் அம்பலப்படுத்தப்பட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படக்கூடியதாக இருக்கலாம். அத்தகைய நேரங்களில் எம்மிடம் இருக்கும் உண்மைகளும், இரகசியங்களும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.



ஆனபடியால், ஔவையார் "ஒளித்து வைக்க வேண்டிய உண்மைகளை ஒருவரிடமும் சொல்லி விடாதே. பாதுகாக்கப்பட வேண்டிய இரகசியங்களைப் பரகசியப்படுத்தி விடாதே" என்னும் பொருள்களை உள்ளடக்கி 'உடையது விளம்பேல்' என இரத்தினச் சுருக்கமான அறவுரை ஒன்றை ஆத்திசூடி மூலம் அழகுற கூறிச் சென்றார்.

இயன்றவரை இவ்வுண்மையை புரிந்து நடத்தல் எல்லோருக்குமே ஏற்றது என்று கூறினால் அது மிகையாகாது.

சப்ரி.எம்.ஷாஃபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல.148

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 |
| 3 | | | ■ | 4 | |
| 5 | 6 | | | | ■ |
| ■ | ■ | 7 | ■ | | 8 |
| | ■ | ■ | 9 | 10 | |
| 11 | | | | ■ | |

**மேலிருந்து கீழ்**

01. அதிகம் படித்தவன்.
02. பூட்டைத் திறப்பது.
06. பாட்டுக்கொரு புலவன். (தலைகீழ்)
07. மனதை ஒருமுகப்படுத்தும் செயற்பாடு.(குழம்பியுள்ளது)
08. நெற்கொத்து.
09. கோள் ஒன்று.
10. இதன் சாற்றில் சர்க்கரை செய்வர். (தலைகீழ்)
11. புற்று. (தலைகீழ்)

**இடமிருந்து வலம்**

01. தொழிலாளர்களின் தினம்.
03. தாய்க்குப் பின் .................
04. நாம் வாழும் உலகம்.
05. வாணிகம். (குழம்பியுள்ளது)
08. உயிரின் ஆரம்பநிலை. (மாறியுள்ளது)
09. சேறு.
11. முச்சுடர்களில் ஒன்று.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.147 விடைகள்**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 நூ | ல | 2 க | ம் | ■ | 3 அ |
| த | ■ | ல் | ■ | 4 வ | ழி |
| ன | ■ | ■ | 5 உ | ள | வு |
| ம் | ■ | னை | த | 6 வே | ■ |
| ■ | 7 பி | ■ | டு | ■ | 8 நி |
| 9 தெ | ன் | னை | ■ | 10 ப | லா |

**A படத்தை அவதானித்து, B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக**




**குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து, படங்களுக்கான சொல்லைப் பெறுக**






- godoth
- eseceh
- kace
- tewar
- rebad
- wasdinch
- iceju




**இலக்கங்களுக்கு வழங்கப் பட்டுள்ள நிறங்களுக்கமைய படத்தை நிறந்தீட்டுக**




**விடை தருக**


1. 13 + 5 = ____
2. 1 + 17 = ____
3. 2 + 15 = ____
4. 12 + 6 = ____
5. 13 + 1 = ____
6. 3 + 12 = ____
7. 3 + 16 = ____
8. 14 + 6 = ____
9. 12 + 4 = ____
10. 15 + 4 = ____
11. 16 + 2 = ____
12. 7 + 13 = ____




**அறிவுக்கு விருந்து (22.07.2015) விடைகள்**

shoe
duck
doll
globe
block
green

| | | | | | |
|---|---|---|---|---|---|
| x | k | c | o | l | b |
| l | n | e | e | r | g |
| l | g | l | o | b | e |
| o | q | n | c | w | c |
| d | n | s | h | o | e |
| u | w | k | c | u | d |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



தெமட்டகொடையைச் சேர்ந்த சாந்தகுமார் - இந்திராணி தம்பதியரின் செல்வப் புதல்வன் அம்ரித், தனது ஏழாவது பிறந்தநாளை 11.08.2015 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.



ந.சிபிகா,
குருக்கள்புதுக்குளம் அரசினர் த.க.பாடசாலை,
குருக்கள் புதுக்குளம்.





அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



செ.தியந்தரி,
சைவப்பிரகாச ஆரம்பப் பாட.,
வவுனியா.



ரி.ராம்பிரசாத்,
தில்லையடி, புத்தளம்.



த.யோர்த்திக்கா,
புனித அந்தோனியார் ம.ம.வித்.,
கொழும்பு-03.



எம்.இப்ஃலான்,
கணேவல்பொல மு.ம.வித்.,
கெக்கிராவ.




அக்ரம்,
சது/கஸ்சாலி மு.வித்.,
சம்மாந்துறை.



எஃப்.சுஹைறனா,
பதுரியா மத்திய கல்.,
மாவனல்லை.



பி.ஜெயகிருஷாந்த்,
சிங்காரவத்த, கொஸ்லந்த.



# சூரிய குடும்பத்திற்கு அப்பால் மனிதனால் பயணிக்க முடியுமா?

சூரிய குடும்பத்தில் உயிர்த் துடிப்புள்ள ஒரே ஒரு கிரகம் எமது பூமியே... எமது பூமி போன்ற வேறு கிரகங்கள் அண்டவெளியில் ஏதாவது இருக்கின்றனவா...? என்பதை அறிவதே ஆய்வாளர்களின் தற்போதைய கரிசனையாக உள்ளது. பூமி போன்ற சில கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் சூரிய குடும்பத்திற்கு அப்பால் பயணித்து அத்தகைய கிரகங்களில் தரையிறங்கப் போதிய விஞ்ஞான தொழில்நுட்ப வசதிகள் மனிதனிடம் இல்லை என்றே கூறவேண்டும்.






தற்போதளவில் விஞ்ஞானிகளிடம் மட்டுப்படுத்தப்பட்ட திட்டங்களே உள்ளன. சூரிய குடும்பத்தில் உள்ள கிரகங்களை ஆராய்தல் பூமியை ஒத்த மேலும் பல கிரகங்களைக் கண்டறிதல், வேற்றுக்கிரகவாசிகள் உள்ளனரா? என்ற ஆய்வுகளில் ஈடுபடுதல் எனும் திட்டங்களே அடிப்படையாக உள்ளன. இத்தகைய திட்டங்களை நிறைவுசெய்வது தொடர்பாகவும் போதிய தொழில்நுட்ப வசதிகள் இல்லாமலேயே இருக்கின்றன.

நிலைமை இவ்வாறு இருக்க இருள்சூழ்ந்த விண்கற்கள் நிறைந்த சூரிய குடும்பத்திற்கு அப்பாற்பட்ட பால்வீதிகளில் மனிதன் பயணிப்பது மிகவும் சவாலான விடயமாகவே உள்ளது. இவற்றை விட முக்கிய விடயம் இப்பயணத்திற்குரிய பாதுகாப்பான, விரைவாகப் பயணிக்கும் விண்கலம் ஒன்றைக் கண்டறிவதாகும். தற்போதைய விண்வெளி தொடர்பான மனித தொழில்நுட்பத்துடன் ஒப்பிடும் போது இத்தகைய விண்கலத்தை தயாரித்து ஆயிரக் கணக்கான ஒளி ஆண்டுகள் சூரிய குடும்பத்திற்கு அப்பால் பயணமாவது வெறும் கற்பனையே. அல்லது சாத்தியமற்ற விடயம் என்பதே உண்மையாகும்.

எனினும், சாத்தியமற்ற விடயங்கள், வெறும் கற்பனை என பண்டைய காலங்களில் கருதப்பட்ட பல விடயங்கள் தற்போது மனித விஞ்ஞான தொழில்நுட்பத்தால் நிஜமாக்கப் பட்டுள்ளன.

# மனிதன் இன்றி இயங்கும் வான் ஊர்திகள்



மனிதனற்ற வான் வெளி ஊர்திகள் (Unmanned aerial Vehicle) என்பது கணினி மூலமோ அல்லது தொலைக்கட்டுப்பாட்டுப் பொறி (remote control) மூலமோ இயங்கும் ஒரு வானூர்தியாகும். இவை இராணுவ உபயோகத்திற்காகவே அதிகம் பயன்படுகின்றன. [illegible] இலக்குகளைத் தாக்குதல், உளவறிதல், அடர்ந்த மனிதர்கள் உட்புக முடியாத காடுகளைக் கண்காணித்தல் மற்றும் பாலைவனங்கள், ஆழ் கடல்கள், நாடுகளுக்கு இடையிலான எல்லைகள் என்பனவற்றைக் கண்காணிப்பதற்கும் இத்தகைய மனிதனற்ற வான் ஊர்திகள் பயன்படுகின்றன.



இவற்றுக்குரிய கட்டளைகள் இவற்றை இயக்கும் கட்டுப்பாட்டு அறைகளில் இருந்தே விடுக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலிபாபாவும் 40 திருடர்களும்

12

கதை, ஓவியம்: வேனு வாரியத்




விளையாட்டுத்துறையில் பல சாதனைகளைப் படைத்த ஜெசி ஓவன்ஸ் ஓர் ஓட்டப்போட்டி வீரராவார். இவர் அமெரிக்காவில் நிக்ரோ குடும்பமொன்றில் 1914 ஆம் ஆண்டு பிறந்தார். சிறு வயதில் வறுமையால் மிகவும் கஷ்டப்பட்ட இவர் ஒரு சமயத்தில் கூலிக்கு மூட்டை தூக்குபவராகவும் தொழில் பார்த்துள்ளார். காலப்போக்கில் அதாவது, தமது பதின்னான்காவது வயதில் இவரது விளையாட்டுத் திறமைகளை இவர் வெளிக்காட்டத் தொடங்கினார்.

## உலகில் பிரபல்யமானவர்கள்

ஆரியர்கள்தான் சகல இனத்தவர்களையும் விட உயர்ந்தவர்கள் என்ற நிலைப் பாட்டினை ஜேர்மன் தலைநகரான பேர்லினில் 1936 இல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் மாற்றியமைத்து நான்கு தங்கப் பதக்கங்களைப் பெற்று இவர் சாதனை படைத்தார்.




# ஜெசி ஓவன்ஸ்

முதலில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டங்களில் அடுத்தடுத்து தங்கப் பதக்கம் பெற்ற இவர், 26 அடி 5 அங்குலம் தாண்டி தூரம் பாய்தலிலும் சாதனை படைத்தார். இச்சாதனை 24 வருடங்கள் வரை எவராலும் முறியடிக்கப்படவில்லை. தொடர்ந்து 4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் பங்குபற்றி அதிலும் சாதனை படைத்தார். ஓட்டத்தில் ஆச்சரியப்பட வைக்கும் வேகம் காரணமாக 'பறக்கும் ஓவன்ஸ்' என்று இவர் அழைக்கப்பட்டார்.

ஜெசி ஓவன்ஸ் விளையாட்டு உலகை கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலம் தனது சாதனைகள் மூலம் கட்டுக்குள் வைத்திருந்தார். இவர் 11 சாதனைகளை நிகழ்த்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. திறமையான வீரராகிய ஜெசி ஓவன்ஸ் 1980 ஆம் ஆண்டில் தனது 66 ஆவது வயதில் இறை எய்தினார்.

-தொகுப்பு:
**ஜுனைட் எம்.பஹ்த்**


## ஓவியம் வரைவோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 'டார்ஸன்' முறையில் நீரில் குதிப்போம்!

## விஜய் சாரணர் உலகம்



நீர் சார்ந்த சாரணர் விளையாட்டுக்களில் டார்ஸன் (Tarzan) குதிப்பு முதலிடத்தினை வகிக்கின்றது. மேலும் மெருகேற்றப்பட்டுள்ள இந்த முறையானது, பெண் சாரணியர்களுக்கும் உகந்தது.

### ஆழமற்ற நீர்ப் பரப்பினை தெரிவுசெய்து கொள்க




எட்டு அடி ஆழம் கொண்ட சுத்தமான நீர் நிரம்பிய குளம் இதற்குப் பொருத்தமாக இருக்கும். நீர் நிலையில் ஆழ் பரப்பினை ஆராய்ந்து ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்வது மிகவும் அவசியமானதாகும். அதன் பின்னர் அப்பியாசத்தினை ஆரம்பிக்க முடியும்.

### மரத்தின் கிளையில் கயிற்றினைக் கட்டுங்கள்




குளத்தின் அருகில் உள்ள மரத்தின் கிளையில் தொங்கவிடப்பட்டுள்ள கயிறு 10 அடி தூரத்திற்கு செல்லும் அளவுக்கு போதுமான அளவைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். இந்தக் கயிற்றில் சிக்கக்கூடிய மரம், செடிகொடிகள் குறித்துக் கவனம் செலுத்தி அவற்றினை அப்புறப்படுத்த வேண்டும்.

### உயிர்காப்பு முடிச்சினை இடுங்கள்




மரத்தின் கிளையில் முடிச்சிடு வதற்கு உயிர்காப்பு

முடிச்சினைப் பயன்படுத்த முடியும். கயிறு உராயும் இடத்தின் மீது கிறீஸ் பூசுவதன் மூலம் கயிற்றுக்கு ஏற்படக்கூடிய உராய்வினைத் தடுத்துக்கொள்ள முடியும்.

**கவனிக்க:** உயிர்காப்பு முடிச்சினை இட்டவுடன், அந்தக் 'கட்டு' கிளையில் கயிறு நன்கு அசையும் விதத்தில் அமைய வேண்டும்.

### கயிற்றில் முடிச்சுத் தொடர்களை இடுங்கள்




கயிற்றின் முனையில் முடிச்சிடுவதற்கு முன்னர் சம தூர அளவில் முடிச்சுத் தொடர்களை இடுதல் வேண்டும். கயிற்று ஏணியினை அமைப்பதற்குப் பொருத்தமான அந்த முடிச்சினை இடுவதற்கு 'இரட்டை எளிய முடிச்சினை' பயன்படுத்த முடியும். 'எளிய முடிச்சு' இரண்டு மடங்கு பெரிதென்பதால் கயிற்றினை நன்கு பிடித்துக்கொள்ள முடியும்.

### செயற்பாட்டினை ஆரம்பிப்போம்




'டார்ஸன்' குதிப்பு முறையின் மூலம் நீரில் குதிக்கும் சாரணர் கயிற்றில் தொங்கி மூன்று தடவைகள் அங்குமிங்கு அசைந்த பின்னர் நீரில் குதிக்க வேண்டும். நீரில் குதிக்கும்போது, கயிற்றுக்கும் சாரணருக்கும் இடையில் 3 சிறிய இடைவெளி அளவினைப் பேணிக்கொள்ளுதல் வேண்டும். முதலில் நீர்ப்பரப்பில் சாரணரின் பாதங்களே பட வேண்டும்.

**கவனிக்க:** சாரணர்கள் இந்த அப்பியாசத்திற்கு முன்னர் உயிர் காப்பு கயிற்றினை அணிந்திருத்தல் அவசியமாகும்.




## பிராந்திய செய்திகள் 6

### ஆபிரிக்கா



சிறுவர் தொழிலாளர் தினத்தையொட்டி ஆபிரிக்க பிராந்திய சாரணர்கள் அதிக அவதானம் செலுத்தியிருந்தனர். சிறார்களை தொழில்களில் அமர்த்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலங்கள், ஓவியக் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

### ஆசிய பசுபிக் பிராந்தியம்



சிறுவர் தொழிலாளர் சேவைகளை எதிர்க்கும் நோக்கத்துடன் பல நிகழ்ச்சிகள் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டன. இவற்றுள் பிலிப்பைன்ஸ் நாட்டு சாரணர்கள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிகள் அனைவரினதும் கவனத்தினை ஈர்த்திருந்தது.

### ஐரோப்பிய பிராந்தியம்



சாரணர்கள் மற்றும் சாரணியர்கள் சுமார் ஒரு லட்சம் பேர் வரையில் கலந்துகொண்ட நிகழ்வு ஒன்று இத்தாலியின் ரோமன் கஸ்னோரிக்கா தேவாலயத்தில் நடைபெற்றது. பாப்பரசரின் ஆலோசனையின் பேரில் இந்நிகழ்வு நடைபெற்றது. தற்போதைய சமூக நிலையை மேலும் முன்னேற்றுவதற்கு சாரணர்கள் பணியாற்ற வேண்டும் என்று பாப்பரசர் சுட்டிக் காட்டினார்.

### மத்திய அமெரிக்க பிராந்தியம்





'ஒரே பாதை' என்ற தொனிப்பொருளில் பிரான்சில் நடைபெறவுள்ள 'ரோவ் வே' சர்வதேச நிகழ்ச்சித் திட்டம் குறித்து இங்கு அறிமுகம் செய்து வைக்கப் பட்டது. 2016 ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள இந்த முகாமில் ஐயாயிரம் சாரணர்களை இணைத்துக்கொள்ள ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளிக் கிரகத்தில் எரிமலை வெடிப்பு




சூரியனில் இருந்து இரண்டாவதாக அமைந்துள்ள கோள் வெள்ளி ஆகும். ஆங்கில மொழியில் இது வீனஸ் என்று அழைக்கப்படுகின்றது. பூமிக்கு வெள்ளியின் ஆரம் 6,052 கி.மீற்றர் ஆகும். சூரியனில் இருந்து 108 200 000 கி. மீற்றர் தூரத்தில் வெள்ளி அமைந்துள்ளது. வெள்ளியின் ஒரு நாளானது (பூமியின் நாட்களின்படி) 116 நாட்களும் 18 மணித்தியாலங்களும் ஆகும். இது வெப்பம் மிகுந்த ஒரு கோள். அதன் வெப்பம் 462°C. அத்தோடு, ஒளி மிகுந்த கிரகம். ஒரு முறை சூரியனைச் சுற்றி வர எடுக்கும் காலம் புவி நாட்களின்படி 225 நாட்களாகும். ஞாயிற்றுத் தொகுதியில் அதி உயரமான மலைகள் வெள்ளிக் கிரகத்திலேயே உள்ளன. குமுறும் எரிமலைகளால் நிறைந்ததோர் கிரகமாகவும் வெள்ளி திகழ்கின்றது.

## வெள்ளியை ஆக்கிரமித்த எரிமலைகள்

சுமார் பில்லியன் வருடங்களுக்கு முன், வெள்ளிக் கிரகமானது, எரிமலைகளால் நிறைந்திருந்தது. அந்த எரிமலைகள் அனைத்தும் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறி லாவா எனப்படும் எரிமலைக் குழம்பு பெருக்கெடுத்து ஓடியதனால் வெள்ளியின் மேற்பரப்பு அனைத்தும் மேற்படி கொதிக்கும் எரிமலைக் குழம்பினால் மூடப்பட்டது. இந்த எரிமலைகள் இதுவரையிலும் குமுறிக் கொண்டே இருப்பதாக வானவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். வெள்ளிக் கிரகத்தின் சுற்றுப்பாதைக்கு அனுப்பப்பட்ட 'வீனஸ் எக்ஸ்ப்ரஸ்' எனும் ரொபோ ஆய்வுக்கலம் புவிக்கு அனுப்பிய தரவுகளைக் கண்ணுற்றே ஐரோப்பிய விஞ்ஞானிகள் இக்கருத்தை தெரிவிக்கின்றனர்.

## வீனஸ் எக்ஸ்பிரஸ்

ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தால் வெள்ளிக் கிரகத்திற்கு அனுப்பப்பட்ட முதலாவது ஆய்வு விண்கலமே வீனஸ் எக்ஸ்பிரஸ் ஆகும். இது 2005 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் வெள்ளியை நோக்கிப் புறப்பட்டுச் சென்று 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெள்ளியை அடைந்தது. வெள்ளிக் கிரகத்தின் தரைப்பகுதி எவ்வாறு அமைந்துள்ளது, அதன் இயல்புகள் என்ன என்பதை ஆராய்வதே வீனஸ் எக்ஸ்பிரஸ் விண்கலத்தின் நோக்கமாகும்.




கணினியினால் வடிவமைக்கப்பட்ட எரிமலையின் தோற்றம்

## வெள்ளிக் கிரகத்தின் அமைப்பு

வெள்ளியின் வளிமண்டலம் நச்சுக் காபனீரொக்சைட்டினால் நிறைந்துள்ளது. அவற்றின் மேகங்களில் சல்ஃபியுரிக் அமிலம் உள்ளது. அதன் வாயு மண்டலம் திணிவு நிறைந்தது. வெள்ளிக் கிரகமானது, ஏனைய கிரகங்களைப் போலல்லாது நேரெதிர் திசையிலேயே சுழல்கின்றது. அதாவது, கிழக்கிலிருந்து மேற்காக சுழல்கின்றது. இதனால், வெள்ளியில் சூரியன் மேற்குத் திசையில் உதிக்கின்றது.

உபகோள்கள் எதுவும் இதற்குக் கிடையாது. வெள்ளிக் கிரகத்தின் உட்புறத்தில் நிக்கல் மற்றும் இரும்பு என்பன இருக்கின்றன. வெளிப்புறத்தில் சிலிகேட்களால் நிறைந்த வெளிப்பரப்பே உள்ளன.

## மற்றுமொரு ஆய்வு

அமெரிக்காவின் தனியார் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் நிறுவனமொன்று வெள்ளிக் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக விமானம் ஒன்றை அனுப்பவுள்ள தகவலை கடந்த வாரம் வழங்கியிருந்தோம். 2021 இல் இந்த விமானம் வெள்ளியின் வாயுமண்டலத்தை நோக்கிப் பறக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த முக்கியமான விமானத்திற்கு 'வெம்ப்' எனப் பெயரிட்டுள்ளனர். இது போயிங் 737 பயணிகள் விமானத்தைவிட இரு மடங்கு நீளம் கொண்டதாகும். இதன் அதி உயர் (உச்ச) வேகம் மணிக்கு 220 கிலோ மீற்றராகும்.

கெமரா, வளிமண்டல ஆய்வு உபகரணங்கள், மாதிரிகளை சேகரிக்கும் உபகரணங்கள் என்பனவற்றை இந்த விமானம் கொண்டு செல்லவுள்ளது. இது வெள்ளியின் வளிமண்டலத்திற்குள் நுழைந்த பின் அது வெள்ளியின் மேற்பரப்பின் வெளிப்புறத்தில் இருந்து 50 கிலோ மீற்றர் அல்லது 70 கிலோ மீற்றர் உயரத்தில் பறக்கும். விமானம் பறப்பதற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள வான் எல்லையானது, பூமியின் வளிமண்டலத்திற்கு சமனானது என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இவ்வார கார்ட்டூன் படம்









# உங்கள் வாயினுள் அதிகளவு பெக்டீரியாக்கள்...!





ஒருவரது வாயினுள் சுமார் 500 - 650 வரையிலான பெக்டீரியா இனங்கள் உயிர் வாழ்கின்றனவாம்! அத்துடன், ஒருவரின் உடலிலுள்ள பெக்டீரியாக்களின் எண்ணிக்கையானது, அவரது உடல் செல்களின் எண்ணிக்கையைப் போல பத்து மடங்கு அதிகமானது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், மனிதர்களிடம் வேறுபாடு இருந்தாலும், அவர்களுடைய வாயில் வாழும் பெக்டீரியாக்களிடையே ஒத்த தன்மை இருப்பதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் போது கண்டறியப்பட்டுள்ளது.

மனிதனின் சிறுகுடலிலும் தோலிலும் குடியிருக்கும் பெக்டீரியாக்கள் பற்றியே இதுவரை ஆய்வுகள் நடத்தப்பட்டு வந்தன. இப்போது மனிதனின் வாயில் வாழும் பெக்டீரியாக்களைப் பற்றியும் ஆய்வுகள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# வளி மாசடைவினால் சிசு மரணம் அதிகரிப்பு



வளி மாசடைவு காரணமாக, வருடம்தோறும் உலகளாவிய ரீதியில் 21 லட்சம் (2.1 மில்லியன்) சிசுக்கள் இறப்பதாக தெரிய வந்துள்ளது. கருவிலுள்ள சிசுக்கள் மற்றும் இரண்டு வயது வரையான குழந்தைகளே இவ்வாறு மரணத்தை தழுவுவதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

வளி மாசடைவுக்கு காரணமாக உள்ள 'நுண்ணிய துணிக்கைகள்' (Fine Particulate Matter) உலகம் முழுவதும் பரவியுள்ளமையே இதற்கு காரணமாகும். தூசுக்களினாலும் துகள்களினாலுமே நுண்ணிய துணிக்கைகள் உருவாகியுள்ளன. இவை அளவில் 2.5 மைக்ரோ மீற்றரை விட குறைவானவை எனக் கூறப்படுகின்றது.

மேற்படி நுண்ணிய துணிக்கைகள் வாகனப் புகைகளினாலும் தொழிற்சாலைப் புகைகளினாலும் வீட்டுப் பொருட்களின் பாவனையின்போது வெளியேறும் புகைகளினாலும் வளிமண்டலத்தினைச் சென்றடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால், வளி மாசடைகின்றது. வளியில் கலந்துள்ள இந்த துணிக்கைகள் மிகவும் சிறியவைகள் என்பதால், மனிதர்கள் சுவாசிப்பதன்மூலம் சுவாசப்பையினை இவை சென்றடைந்து நோய்களை ஏற்படுத்துகின்றன.




# நீரின் மேல் நடக்கும் சிலந்திகள்



நீரின் மேல் நடக்கும் கலையை சில சிலந்திகள் இயல்பாகவே பெற்றுள்ளதாக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 21 சிலந்தி இனங்களுக்குட்பட்ட, 325 சிலந்திகளை ஆய்வுக்குட்படுத்தியதில், அவற்றில் பல்வேறு சிலந்தி இனங்களின் கால்கள் இயற்கையாகவே நீரில் நனையாத தன்மையினை கொண்டதென தெரியவந்துள்ளது.

அதுமட்டுமன்றி, சிறிய நீர்நிலைகளின் மேல் சிலந்திகளுக்கு இறங்க நேரிட்டால், நீரின் மேல் நடந்து சென்று கரைசேர்வதற்காக அவை பன்னிரெண்டிற்கும் மேற்பட்ட உத்திகளை பயன்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. கால்களை உயர்த்தி, காற்றின் போக்கை பாய்மரம் போல பயன்படுத்தி கரை சேருதல், நீரில் மிதக்கும் இலை தழைகள் மீது சிலந்தி நூலைப் பீய்ச்சி அடித்து, கரை சேருதல் என சிலந்திகள் கையாளும் உத்திகள் உயிரியல் வல்லுனர்களையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2015, ஒகஸ்ட் 05 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday August 05, 2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org